பக்கங்கள் எட்டு
விலை ரூபா 5-00

Registered as a News Paperin SriLanka.

# வலம்புரி
VALAMPURI

சங்கு 02 வள்ளுவர் ஆண்டு 2032 வைகாசி 20 ஞாயிற்றுக்கிழமை 3-06-2001 தொலைபேசி: 3378 ஒலி: 166

அசல் 22 கரட் தங்க
நகைகளுக்கு யாழ் நகரில்
சிறந்த ஸ்தாபனம்
அர்ச்சனா
ஜுவலர்ஸ்
118, கஸ்தூரியார் வீதி.
176/1, நாவலர் வீதி.
யாழ்ப்பாணம்.
(கி-2052)

## ★ மைந்தன் இளவரசர் திபேந்திராவின் துப்பாக்கிச்சூட்டில்
# நேபாள மன்னர் பிரேந்திரா உட்பட
# அரசகுடும்பத்தவர் 11 பேர் கொலை

## உலகத் தலைவர்கள் அதிர்ச்சி

(காட்மண்டு)

நேபாளத்தின் முடி மன்னர் பிரேந்திரா உட்பட அரச குடும்பத்தவர்கள் 11 பேர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

முழு உலகையும் அதிர்ச்சியிலும் ஆச்சரியத்திலும் வேதனையிலும் ஆழ்த்தியுள்ள இந்தச் சோகச் சம்பவம் நேற்றுமுன்தினம இரவு அரச மாளிகையில் நடந்தேறியுள்ளது.

மன்னரின்மகனும் நேபாளத்தின் முடிக்குரிய இளவரசருமான திபேந்திரா தனதுசொந்த உறவுகள் என்றும் பாராது அரச குடும்பத்தை அடியோடு அழித்தொழித்ததோடு தன்னைத்தானே சுட்டு தற்கொலை செய்யவும் முயற்சித்தார்.

சோதிடத் தகவல் ஒன்றின் பின்னணியில் மன விரக்தியடைந்த நிலையில் வருங்கால இளவரசர் இவ் வெறியாட்டத்தை நிகழ்த்தியிருப்பதாகக் கூறப்படுகிறது.

நேபாளத்தின் முடி மன்னர் பிரேந்திரா உட்பட அரச குடும்பத்தவர்கள் 11 பேர் கடந்த வெள்ளியன்று, ஒன்றாக அமர்ந்து இரவு உணவருந்திக் கொண்டிருந்த வேளையிலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்தக் கொலைகளை செய்த முடிக்குரிய இளவரசர் திபேந்திராபின்னர் தன்னைத் தான் துப்பாக்கியால் சுட்டதால் ஆபத்தான நிலையில் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்தத்துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில், மன்னர் பிரேந்திரா, மகாராணி ஐஸ்வர்யா தேவி, இளவரசர் நிராஜன், இளவரசி சுல்தி மற்றும் மன்னரின் சகோதரிகளான சாரதா, சாந்தி, மைத்துனர் குமார்கடுகா ஆகியோர் உட்பட 11 பேர் பலியாகியுள்ளனர்.

(6-ம் பக்கம் பார்க்க)

## நேபாள மன்னரின் பூதவுடல் நேற்று தகனம்

(காடமண்டு)

இளவரசனால் சுட்டுக் கொல்லப்பட்ட நேபாள மன்னர் பிரேந்திராவினதும் மற்றும்அரசகுடும்பத்தவரதும் பூதவுடல் நேற்று ''பாக்மதி'' புனித நதிக்கரையில் இந்து சமய முறைப்படி தகனம் செய்யப்பட்டது.

பூதவுடல்கள் தகனம் செய்யப்படுவதற்கு முன்னதாக கட்மண்டுவின் முக்கிய இடங்களில் மக்களின் இறுதி அஞ்சலிக்காகவைக்கப்பட்டிருந்தது

நேபாள மன்னரினதும் அரச குடும்பத்தவரதும பூதவுடல்களின் இறுதிய சதங்கையில் கலந்து கொண்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது (வ)

## மன்னரின் மறைவுக்கு ஜனாதிபதி அனுதாபம்!

(கொழும்பு

நேபாள மன்னர் பிரேந்திராவின் அரச குடும்பத்திற்கு நேர்ந்த கதியையிட்டு தானும் நாட்டு மக்களும் அதிர்ச்சி அடைந்திருப்பதாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா தெரிவித்துள்ளார்.

சம்பவம் தொடர்பாக சார்க் அமைப்பின் தலைவியும் இலங்கை ஜனாதிபதி விடுத்துள்ள அனுதாபச் செய்தியில் மேலும் தெரிவித்திருப்பதாவது:

எத்தகைய சோகசம்பவங்களையும சகித்துக்கொள்ளும் மனோதிடம் உள்ள நேபாள மக்கள் இப்பாரிய இழப்பை தலைமீதுகொண்டு மீள்வார்கள் என நம்புகிறேன்.

சார்க் அமைப்பின் தலைவர்களில் ஒருவராக இருந்த மன்னர் பிரேந்திரா அந்த அமைப்பின் முன்னேற்றத்துக்கு அவர் செய்த அர்ப்பணிப்புகளையும் ஜனாதிபதி நினைவு கூர்ந்துள்ளார்.

(8ம் பக்கம் பார்க்க)

## சமாதானப்பேச்சுக்களை ஆரம்பிக்க "பிரபாவிற்கு" அழைப்பு விடப்படும்!

### ஜனாதிபதி தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டில் யுத்தத்தை முடிவிற்கு கொண்டு வந்து, சமாதானத்தைநிலைபெறச் செய்வதற்கான சட்ட மொன்றை விரைவில் அமுல்படுத்த வுள்ளதாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா தெரிவித்துள்ளார்.

கம்பளை அப்புக்னுகுவவில் புதிய கட்டட மொன்றுக்கு அடிக்கல்நாட்டும்வைபவத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித் துள்ளார்.

அவர் மேலும்தெரிவிக்கையில், சமாதானத் தையும் அமைதியையும் ஏற்படுத்துவ

(8-ம் பக்கம் பார்க்க)

## இந்தியாவில் இருந்தவாறு ரணில் அனுதாபம்!

(கொழும்பு)

நேபாள மன்னர் பிரேந்திராவும், அவரது அரச குடும்பத்தவரும் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் குறித்து ஆழ்ந்த கவலை அடைந்திருப்பதாக எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கா அனுப்பி வைத்துள்ள அனுதாபச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

தற்போது இந்தியாவில் தங்கியுள்ள எதிர்க்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்கா அங்கிருந்து கொண்டே தனது அனுதாபச் செய்தியை நேபாள பிரதமர் கிரிஜா பிரசாத் கொரிலாலாவுக்கு அனுப்பி வைத்துள்ளார். ம

## புலிகளுக்குச் சாதகமாகவே நோர்வேயின் மத்தியஸ்தம் உள்ளது

### அமைச்சர் மகிந்த இந்தியாவில் தெரிவிப்பு

(புதுடில்லி)

அரசாங்கத்திற்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையே சமரசத்தை ஏற்படுத்துவதில்அனுசரணையாளராக செயற்படும் நோர்வே, தனது மத்தியஸ்த முயற்சியில் விடுதலைப்புலிகளுக்கு சாதகமாக அறிக்கைகளை வெளியிட்டு வருகிறது இதனால் அந்நாட்டின் சமாதான முயற்சியில் சிங்களமக்கள் சந்தேகம் கொண்டுள்ளனர்.

இந்திய தலைநகர் புதுடில்

[8ஆம் பக்கம் பார்க்க]

## தேசியஅரசு அமைப்பதில் பொ.ஐ.மு-ஐ.தே.க முயற்சி செய்திக்கு அமைச்சர் மறுப்பு

(கொழும்பு)

பொதுஜன ஐக்கிய முன்னணியும் ஐக்கிய தேசியக் கட்சியும் இணைந்து தேசிய அரசு அமைப்பதற்கு முயற்சி என்றசெய்தியை பெயர் குறிப்பிட விரும்பாத சிரேஷ்ட அமைச்சர் ஒருவர் அடியோடு மறுத்துள்ளார்.

[8ஆம் பக்கம் பார்க்க]

## இராணுவத்தின் பிரதம தளபதியாக ஜானகபெரேரா நியமனம் பெறுவார்?

சேவையிலிருந்து ஓய்வு பெற்றுச்சென்ற மேஜர் ஜெனரல் ஜானக பெரேராவை மீண்டும் இராணுவ சேவையில் இணைத்துக் கொள்வதற்கான முயற்சிகள் நடைபெற்று வருகின்றன.

பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்காவும் வேறு சில அமைச்சர்களும் இதற்கு ஆதரவுதேடும் பணியில் ஈடுபட்டுள்ளதாக அறியப்படுகிறது. வடக்குக்கிழக்கில் பலவெற்றிகரமான இராணுவ நடவடிக்கைகளில் பங்குபற்றியவரான இவர் இவ்வாண்டு ஜனவரியில் ஓய்வுபெறும் முடிவுக்கு வந்திருந்தார். பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தையுடன் சர்ச்சை

[8ம் பக்கம் பார்க்க]

## பயங்கரவாத தடைச்சட்ட நீக்கம லக்ஷ்மன்கதிர்காமர்தலைமையில ஆரய்வு

(கொழும்பு)

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குவது சம்மந்தமாக ஆராயும் கூட்டமொன்று, வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் தலைமையில் நடைபெற்றுள்ளது.

இலங்கையில அமுலில் உள்ள பயங்கரவாதத் தடை சட்டம் காரணமாக. வெளிநாடுகளில் அகதி அந்தஸ்து மற்றும் அரசியல் தஞ்சம் கோருபவர்களின் எண்ணிக்கையதிகரித்துள்ளது. இத

(8ம் பக்கம் பார்க்க)

நடுவே நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## திருநெல்வேலியில் வெள்ளிவிழா

(திருநெல்வேலி)

திருநெல்வேலி இந்து அக்கடமியின் வெள்ளிவிழா, இயக்குநர் ஸ்ரீகரன் தலைமையில் அண்மையில் சிறப்பாக நடைபெற்றது.

மேற்படி விழாவில் பிரதம விருந்தினராக யாழ். இந்துக் கல்லூரியின் முன்னாள் அதிபர் மு. பஞ்சலிங்கம் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். விழாவில் சிறப்பு நிகழ்ச்சியாக மாணவர்களின் கலைநிகழ்ச்சிகள் இடம் பெற்றன. (க)

## திருநாள் திருப்பலி

(திருநெல்வேலி)

பாஷையூர் புனித அந்தோனியார் ஆலய வருடாந்த திருநாள் திருப்பலி நாளை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து தினமும் மாலை 5 00 மணிக்கு நவநாள் திருப்பலியும்12 ஆம் திகதி மாலை நற்கருணைவழிபாடும்13 ஆம் திகதி காலை ஆயர் அதி. வணக்கத்துக்குரிய தோமஸ் சவுந்தரநாயகம் தலைமையில் திருநாள் திருப்பலியும் புனிதரின் திருச்சொரூப பவனியும் இடம்பெறும்.

இத்தினத்தன்று ஆலயத்தின் 151 வது ஆண்டு நிறைவு விழாவும் கொண்டாடப்படவுள்ளது. (உ-7-59)

## அரச ஊழியர் சம்பள உயர்வு அடுத்த வருடம்

[கொழும்பு]

அரசாங்க ஊழியருக்கு சம்பள உயர்வு கிடைக்காது என சில தீய சக்திகள் பிரசாரம் செய்து வருகின்றனர்.

ஆனால் அதில் எதுவித உண்மையும் இல்லை என்று தொழில் அமைச்சு வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது சம்பந்தமாக அமைச்சர்களுடன் பேச்சுவார்த்தை நடத்திய பின்னர் அடுத்த வருடம் ஜனவரி மாதம் அரசாங்க ஊழியர்களுக்கு சம்பள உயர்வு கிடைக்குமென நம்பப்படுகிறது.

இதே வேளை, இந்த வருடம் சம்பள உயர்வு வழங்கப்படமாட்டாது என்று ஜனாதிபதி, வரவு செலவுத் திட்ட உரையின், போது தெரிவித்திருந்தார்,

ஆனால் அடுத்த ஆண்டு சம்பள உயர்வு ஏற்பட இணக்கம் தெரிவித்துள்ளார். [உ-7]

## கிராம அலுவலர்க்கு அழைப்பு

(யாழ்ப்பாணம்)

காணாமற் போனவர்கள் தொடர்பான விசாரணைகளை நடத்திவரும் விசேட புலனாய்வுப் பிரிவினர், பின்வருவோர் தொடர்பான விசாரணைகளுக்காக உடனடியாகச் சமுகம் கொடுக்குமாறு கிராமஅலுவலர்களுக்கு அறிவித்துள்ளனர்:

★ கோவை இல பி-50 மட்டுவில் தெற்கு சாவகச்சேரி.

★ வீரக்கண்டு சிவசுப்பிரமணியம் (பி-77) கைதடி தெற்கு சாவகச்சேரி.

★ கோவை இல: பி-133 நாகர் கோயில் மேற்கு.

★ கோவை இல. பி-34 நல்லூர். (உ-10)

## சங்காபிஷேகம்

(புலோலி)

தென்புலோலியூர் அருள்மிகு புற்றளைச் சித்தி விநாயகர் ஆலய மணவாளக் கோலத்திருவிழாவும் சங்காபிஷேகமும் இன்று நடைபெறவுள்ளது. (உ-52)

## பயிர் நிலங்கள் நாசம்

(மல்லாகம்)

அளவெட்டி தெற்குமேலைப் புலம் பகுதியிலுள்ள வயல்களிலும் தோட்ட நிலங்களிலும் கால் நடைகள் கட்டாக் காலிகளாகத் திரிவதால் தாம் பெரிதும் பாதிக்கப்படுவதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர். (உ-122)

## பயிற்சி நெறிக்கு விண்ணப்பம்

(கல்வயல்)

இனவிவகார தேசிய ஒருமைப்பாடு, கனிப் பொருள் மூலவள அபிவிருத்தி அமைச்சின் இணை நிறுவனமான தேசிய ஒருமைப்பாட்டுச் செயற்றிட்டப் பணியகம் செயற்றிட்ட இணைப்பாளர்களைத் தெரிவு செய்வதற்கான விசேட பயிற்சி நெறி ஒன்றினை நடாத்துவதற்குத் தீர்மானித்துள்ளது.

பாடசாலை மற்றும் பல்கலைக்கழகக் கல்வியைப் பூர்த்தி செய்த இளைஞர்யுவதிகள் இப் பயிற்சி நெறிக்கு விண்ணப்பிக்கலாம்.

தெரிவு செய்யப்படுவோர் பயிற்சிக் காலத்தில் மாதாந்தம் 5000/= ரூபா வைப் படியாக பெறுவர்.

பயிற்சியின் முடிவில் மாதம் 7500/= சம்பளத்திட்டத்தில் நியமனமாவர். க.பொ.த [உயர்தர] பரீட்சையில் தேறிய இரு பாலாரும் 18-30 வயதுக்கிடைப்பட்டோர் விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்கள் ஆவர்.

எதிர்வரும் 8-6-2001க்கு முன்னர் சுயமாகத் தயரித்த சுயவிபரக் கோவையுடன் இரண்டு உறவினரல்லாத மத்தியஸ்தரின் முகவரியுடன் பணிப்பாளர், தேசிய ஒருமைப் பாட்டு செயற்றிட்டப் பணியகம், 7/15 சுலைமான் ரெறஸ் கொழும்பு-5 என்ற விலாசத்திற்கு விண்ணப்பங்களை அனுப்ப வேண்டுமென மேற்படி நிறுவனப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். [க-111[

## கொடியேற்றம்

(வட்டுக்கோட்டை)

அராலிஆவரம்பிட்டி முத்துமாரிஅம்மன் ஆலயவருடாந்த உற்சவம் நேற்று முன்தினம் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. (உ-24)

## கொடியேற்றம்

[யாழ்ப்பாணம்]

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலய வருடாந்த மஹோற்சவம் எதிர் வரும்21 ஆம் திகதி வியாழக்கிழமை பகல் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 15 தினங்கள் இடம்பெறவுள்ளன.

ஜூலை 4 ஆம் திகதி புதன் கிழமை மு. ப 10 மணிக்கு தேர்த் திருவிழாவும் மறுநாள் வியாழக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளன. (உ-3)

## ஹொக்கி சுற்றுப்போட்டி

சுப்றா கல்வி நிறுவன ஆதரவில் யாழ். பல்கலைக்கழக விளையாட்டு அவையினால் நடாத்தப்படும் 'சுப்றா' வெற்றிக் கிண்ணத்துக்கான 7 பேர் கொண்ட ஹொக்கி சுற்றுப் போட்டி நாளை திங்கட்கிழமை பி.ப 4 00 மணிக்கு யாழ். பல்கலைக்கழ விளையாட்டுமைதானத்தில் நடைபெறவுள்ளது (உ)

## சையிக்கில் திருட்டு

அல்வாய் தெற்கைச் சேர்ந்த ச. கிருஷ்ணன் என்பவரது வீட்டிற்குள் இரவு நேரம் புகுந்த திருடர், அங்கு பூட்டியிருந்த சயிக்கிலைக் களவாடிச் சென்றுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக நெல்லியடிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (உ-23)

## அச்சுவேலி பஸ் சேவை

### தினமும் 3 தடவைகள்

(யாழ்ப்பாணம்)

முதலாம் திகதி முதல் மீண்டும் ஆரம்பமாகியுள்ள இராஜ வீதி ஊடான யாழ்ப்பாணம்- அச்சுவேலி பஸ் சேவை தினமும் மூன்று தடவைகள் இடம்பெற்றுவருகின்றன.

அச்சுவேலியில்யிருந்து முதலாவது சேவை காலை 7.20 மணிக்கும், யாழ்ப்பாணத்தில் இருந்து முதலாவது சேவை காலை 9.45 மணிக்கும் ஆரம்பமாகி நடைபெற்றுவருகிறது. (உ)


## வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை கரவெட்டி

## வேலைகளுக்கான கேள்வி அறிவித்தல்

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபைத் தவிசாளரினால் கீழ்க் குறிப்பிடப்பட்டிருக்கும் வேலைகளுக்கு கேள்விகள் கோரப்படுகின்றன.

1. கேள்விப் பத்திரங்கள் 08.06.2001ம் திகதி நண்பகல் 12.00 மணிவரை நிர்மாணப் பயிற்சி நிறுவனத்தில் (இக்ராட்) தரம் எம் 9 அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தில் பதிவு பெற்ற ஒப்பந்தக்காரர்களிடமிருந்து கோரப்படுகின்றது. கீழே குறித்த தொகையைச் செலுத்தி கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.
2. கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்பவர்கள் கணிய அளவுச் சீட்டை கொடுப்பனவு அறிக்கை என்பன தயாரிக்கப்படக் கூடியவர்களாக இருத்தல் வேண்டும்.
3. கேள்விப் பத்திரத்தில் ஒரு பிரதியை கடித உறையிலிட்டு அரக்கு முத்திரை வைத்து தலைவர், வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபை, கரவெட்டி. என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அல்லது தலைமை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் இட்டு இரண்டாம் பிரதியை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், யாழ்ப்பாணம் அவர்களுக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். இரண்டு பிரதிகளையும் உரிய இடங்களில் 12.06 2001 முற்பகல் 11.00 மணிக்கிடையில் கிடைக்கச் செய்தல் வேண்டும்.
4. கேள்விகள் 12.06 2001 நண்பகல் 12.00 மணிக்கு திறக்கப்படும்; அச்சமயம் கேள்வி சமர்ப்பித்தவர்கள் சமுகமளிக்கலாம்.
5. கேள்விகளை ஏற்கவோ நிராகரிக்கவோ கேள்விச் சபைக்கு உரிமையுண்டு.
6. மேலதிக விபரங்களை வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் அறிந்து கொள்ளலாம்.

| தொ. இல | வேலை விபரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்பு பணம் | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரப் பணம் |
|---|---|---|---|
| 1 | செல்வாபுரம் வீதி புனரமைத்தல் | ரூ. 1000/- | ரூ. 250/- |
| 2 | கோணாவளை வீதி ,, | ரூ. 1000/- | ரூ. 250/- |
| 3 | ஆதியாமூலை முதலாம் ஒழுங்கை புனரமைத்தல் | ரூ. 1000/- | ரூ. 250/- |
| 4 | வல்வெட்டி இந்து பாடசாலை வீதி ,, | ரூ. 1000/- | ரூ. 250/- |
| 5 | செங்குந்தர் வீதி ,, | ரூ. 1000/- | ரூ. 250/- |
| 6 | கோம்புதூப்புலம் வீதி ,, | ரூ. 1000/- | ரூ. 250/- |
| 7 | தெடுத்தனை வீதி ,, | ரூ. 1000/- | ரூ. 250/- |
| 8 | கிளானை வீதி ,, | ரூ. 1000/- | ரூ. 250/- |
| 9 | அல்வாய் முத்துமாரியம்மன் தெற்கு வீதி ,, | ரூ. 1000/- | ரூ. 250/- |
| 10 | தூதாவளை சந்தை வீதி ,, | ரூ. 1000/- | ரூ. 250/- |
| 11 | விறாச்சிக்குள வீதி ,, | ரூ. 1000/- | ரூ. 250/- |
| 12 | குமரியோடை வீதி ,, | ரூ. 1000/- | ரூ. 250/- |
| 13 | கொம்மாந்தறை வீதி ,, | ரூ. 1000/- | ரூ. 250/- |
| 14 | உடுப்பிட்டி சந்தைக் கடைகள் ,, | ரூ. 1000/- | ரூ. 250/- |
| 15 | சல்லியாவத்தை பொதுக்கிணறு ,, | ரூ. 200/- | ரூ. 100/- |
| 16 | நெல்லிபடி பொதுச் சந்தையில் இறைச்சிக் கடைகள் அமைத்தல் | ரூ. 1000/- | ரூ. 250/- |
| 17 | கிளானை களுக்காவத்தை வீதி ,, | ரூ. 1000/- | ரூ. 250/- |
| 18 | கரவெட்டி மத்தி இலகடி வீதி ,, | ரூ. 1000/- | ரூ. 250/- |

திகதி;- 30-05-2001

வ. நடராசா ஜே. பி.
தவிசாளர்
வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை,
கரவெட்டி.

(கி/2057)


## கிரகசாந்தி...

7ஆம் பக்க தொடர்ச்சி

**வைடூரியம்**

வைடூரியம் கருஞ்சிவப்பு நிறமுடையது. ஒளி ஊடுருவிச் செல்லும், பிரகாசமாகவும், கடினமாகவும், கனமாகவும் இருக்கும். நோய்களைப் போக்கி ஆயுளை அதிகரிக்கச் செய்யும். ஆனால் அணிபவர் எப்போதும் பரிசுத்தமாக இருக்க வேண்டும். கல்லை அணிந்து கொண்டு தீயகாரியங்களைச் செய்யக் கூடாது. மீண்டும் குளித்த பிறகே அணியவேண்டும். தீட்டுப்பட்ட வைடூரியம்கொடுமையிலும் கொடுமையானபயங்கரச் சம்பவங்களை நிகழச் செய்யும். இந்தக் கல்லைப் பரிசுத்தமாக வைத்திருந்தால் அவருக்கு ஒருகுறையு மிருக்காது. அவர் வாழ்க்கையில் எல்லா நன்மையும் பெறுவார்.

**வைரம்**

வைரம் மிக உயர்ந்த கல் என்று அனைவரும் கூறுவர். வைரம் கடினமானது. கனமானது. ஒளி ஊடுருவிச் செல்லக் கூடியது. ஒளிபட்டால் வானவில்லின் அத்தனை நிறங்களையும் இந்தக் கல்லில் காணலாம். நல்ல நீரோட்டமுள்ள கல்லாக இருந்தால் அதில் ஜீவசக்தி பூரணமாக இருக்கும். வைரத்தை உபயோகிப்பதால், ஆயுள் விருத்தியும், புகழும் ஏற்படும்: விரோதிகளைப் பணியவைக்கும் குடும்பத்தில் அமைதியை ஏற்படுத்தி மகிழ்ச்சியை அளிக்கும்.

அனைவரும் நவரத்தினங்கள் பதித்த மோதிரத்தை அணிந்து கொள்ளலாம், இது மிகவும் மேன்மையானது. இதனால் எதிரியும் வசியமாவான், செல்வம் நினைப்பதற்கும் அதிகமாகச் சேரும். நோய்களுக்கும் பாதுகாப்பாக இருக்கும். மன அமைதியும் ஏற்படும்.

## கிணற்றுள் வீழ்ந்து படுகாயம்

(மந்திகை)

குளித்துக் கொண்டிருந்த வேளை கிணற்றினுள் தவறி வீழ்ந்ததில் தலையில் படுகாயமடைந்தவர் பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பருத்தித்துறை தும்பளையைச் சேர்ந்த சிதம்பரநாதன் அருள் பிரகாசம் [வயது 36] என்பவரே படுகாயமடைந்தவராவார். (உ-23)

## கட்டடத் திறப்புவிழா

[திருநெல்வேலி]

புங்குடுதீவு ஸ்ரீ கணேசா மகாவித்தியாலயத்தின் தமிழ்த்தினமும் புனரமைக்கப்பட்ட கட்டடத் திறப்பு விழாவும் இம் மாதம் 7 ஆம் திகதி வியாழக்கிழமைஅதிபர் எஸ். கே. சண்முகலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

மேற்படி விழாவில் பிரதம விருந்தினராக ஊர்காவற்றுறை பிரதேசசபைத் தலைவர் என். மதனராஜாவும் சிறப்பு விருந்தினர்களாக தீவகக்கல்வி வலய முன் பள்ளி உதவிக்கல்விப் பணிப்பாளர் த: தவராசா வேலணைக் கோட்டஉதவிக்கல்விப்பணிப்பாளர் சோ. தில்லைநாதன் ஆகியோரும் கௌரவ விருந்தினராக வேலணை பிரதேச செயலர் செ: இரத்தினமும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (உ)

# செய்தித் துளிகள்

## ஆன்மீக நிகழ்ச்சிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். பகவான் ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலையத்தில் 5 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணி தொடக்கம் போயா தின ஆன்மீக நிகழ்ச்சிகள் இடம்பெறவுள்ளன.

அன்றைய தினம் நபிகள் நாயகத்தின் பிறந்த தின விழா கொண்டாடப்படுவதுடன், ''தத்துவ நெறியும் ஆன்மீக வாழ்வும்'' எனும் தலைப்பில் வைத்திய கலாநிதி பூர்ண உரோமகேஸ்வரன் சிறப்புச் சொற்பொழிவாற்றுவார் (உ)

## அடிக்கல் நாட்டல்

(யாழ்ப்பாணம்)

யாழ். கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலைக்கு புதிதாக கொள்வனவு செய்யப்பட்ட காணியில் புதிய கட்டடத் தொகுதிக்கான அடிக்கல் நாட்டல் அண்மையில் இடம்பெற்றது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் சி. தவராசா, குகேந்திரன், நல்லூர் பிரதேச சபைத்தலைவர் கா மணி பல்லவராஜன் ஆகியோர் கலந்துகொண்டு அடிக்கல்லை நாட்டினர். (உ-104)

## யாழ்.செயலக வளவில் மிதிவெடி

(யாழ்ப்பாணம்)

யாழ். செயலக வளவில் கண்டு பிடிக்கப்பட்ட மிதிவெடி இதுவரை அகற்றப்படவில்லை என செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

மேற்படி பகுதியில் மலைவேப்பு ஒன்றின்கீழ் ஊழியர் ஒருவரால் இம் மிதிவெடி கண்டுபிடிக்கப்பட்டதை யடுத்து படைத்தரப்பிற்கு தெரிவிக்கப்பட்ட போதிலும் உரிய நடவடிக்கை இதுவரை எடுக்கப்படவில்லை. (உ-த)

## பன்னிரு திருமுறைப் பாராயணம்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை திருமுறை மன்றம் மாதந்தோறும் பௌர்ணமி தினத்தில் நடாத்தி வரும் அகத்தியர் தேவாரத் திரட்டு முற்றோதல், பன்னிரு திருமுறைப் பாராயணம் என்பன 5 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8 மணிக்கு கல்வியங்காடு ஸ்ரீநடராஜ முக்குருணிப் பிள்ளையார் ஆலயத்தில் மன்றத் தலைவர் பண்டிதர் வ. பேரின்பநாயகம் தலைமையில் இடம்பெறவுள்ளது. (உ)

## சுகாதாரக் கருத்தரங்கு

(நல்லூர்)

கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் யாழ். மேலதிக கல்விப் பணிப்பாளர் கலாநிதி ச. நா. தணிகாசலம்பிள்ளை தலைமையில் அண்மையில் சுகாதாரக் கருத்தரங்கு நடைபெற்றது. (உ-103)

## கூட்டம் ஒத்திவைப்பு

(அரியாலை)

கொழும்புத்துறைப் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்த மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்காக இன்று நடாத்தவிருந்த கூட்டம் எதிர்வரும் 10ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

(உ- 106)

## கொள்ளையர் சூட்டில் பொலிஸ்பலி

[கொழும்பு]

கொள்ளையர்கள் சென்ற வாகனத்தைசோதனைசெய்ய முயன்ற பொலிஸார் மீதுதுப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதில் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் கொல்லப்பட்டார். தென்பகுதியில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் கொள்ளையர்கள் தப்பிச் சென்றுள்ளனர் இதன்போது வாகனத்திலிருந்த ஆயுதங்கள் மீட்கப்பட்டதோடு சாரதியும் கைது செய்யப்பட்டுள்ளார்.

[உ-5]

## கலந்துரையாடல்

(தென்மராட்சி)

யாழ்ப்பாணத்தில் மனித உரிமைகள் பாதுகாப்பு நிறுவனம் ஒன்றினைப் புதிதாக ஆரம்பிப்பது தொடர்பான கலந்துரையாடல் எதிர் வரும் 5ஆம் திகதி மு.ப 10 மணிக்கு கோவில் வீதியிலுள்ள யாழ் மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். மாவட்ட மனித நேய அமைப்புக்களின் பிரதிநிதிகள் இக் கூட்டத்தில் கலந்து கொள்வார்கள் என இவ்வமைப்பின் செயலாளர் ஏ. கே. சிவசுப்பிரமணியம் தெரிவித்தார். (உ-77)

## மீன்பிடி அமைச்சருக்கு கடிதம்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் வடக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள மயிலிட்டி மீன்பிடிச் சங்கத்தினரின் குறைபாடுகள் விரிவாக அடங்கிய முறைப்பாட்டுக் கடிதம் ஒன்று யாழ் மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் மாவை எஸ் சேனாதிராசாவினால் மீன்பிடி அமைச்சர் மகிந்த ராஜபக்ஷவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (உ)

## பொதுக் கூட்டம்

(தென்மராட்சி)

யாழ். மாவட்டத்துக்கான ஆரம்பப் பிள்ளைப் பருவ மேம்பாட்டுக் குழுவின் ஆலோசனைச் சபையின் வருடாந்தப் பொதுக்கூட்டம் நாளை திங்கட்கிழமை யாழ் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் து. வைத்திலிங்கம் தலைமையில் செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் 2001 - 2002 ஆம் ஆண்டுத் திட்டங்கள் சமர்ப்பிக்கப்படும் என சபையின் செயலாளரும், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளருமான ரி. வி. கிருஷ்ணசாமி தெரிவித்தார். (உ-77)

## ஆசிரியர் கலாசாலை வலி வடக்கில்

(ஏழாலை)

பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையை வலி வடக்குப் பகுதியில் இயங்க வைப்பதற்கு வலி வடக்கு பிரதேச சபை நடவடிக்கை எடுத்து வருகின்றது.

இவ் விடயம் சம்பந்தமான தீர்மானமொன்று, கடந்த மாதம் 30 ஆம் திகதி மேற்படி சபையின் மாதாந்த கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது. (இ-12)

புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள வன்னிப் பிரதேசத்தில்

# சிறுவர்களுக்கான தடுப்பூசி மருந்துகளைப் பேண முடியாத நிலை

(வவுனியா)

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள வன்னிப் பகுதியில் சிறுவர்களுக்கான தடுப்பூசி மருந்துகளைப் பாதுகாத்து வைக்கும், சூரியசக்தியில் இயங்கும் குளிர்சாதனப் பெட்டிகள் செயலிழந்து வருவதாகவும், அதனால் சிறுவர்களுக்கான தடுப்பூசி மருந்துகளைச் சேகரித்துப் பேணி வைக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் சிவமோகன் கூறியுள்ளார்.

சர்வதேச தொண்டர் நிறுவனமான சிறுவர் பாதுகாப்பு நிதியமே சிறுவர்களுக்கான தடுப்பூசிகளை பாதுகாத்து வைப்பதற்கு சூரியசக்தியில் இயங்கும் குளிர்சாதனப்பெட்டிகளை வழங்கி அவற்றைப் பராமரித்து வந்தது.

ஆனால், ஓரிரு ஆண்டுகளாக இந் நிறுவனம் பராமரிக்கும் பொறுப்பிலிருந்து விலகியமையால் குறித்த பாதிப்பு நிலை ஏற்பட்டுள்ளது.

மேற்படி பிரதேச மருத்துவமனைகளில் உள்ள அனைத்து குளிர்சாதனப் பெட்டிகளும் செயலிழந்து வருகின்றன.

இதனால் சிறுவர்களுக்கான தடுப்பூசி மருந்துகள் பழுதடைந்து வரும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

இது விடயமாக சம்பந்தப்பட்ட உயரதிகாரிகளுடன் கிளிநொச்சி, முல்லைத்தீவு சுகாதாரத் திணைக்களங்கள் தொடர்புகொண்டு வருகின்றன என கிளிநொச்சி முல்லைத்தீவு பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் சிவமோகன் தெரிவித்துள்ளார். (உ-3)

## இராசி பலன்

03 06 2001
(வைகாசி 20, ஞாயிறு)
துவாதசி மு ப 9.18 வரை
சுவாதி மு இ 10.13 வரை
ராகுகாலம் 4.22 - 5 52
நல்லநேரம் - 8.52 - 10.22
சித்தம்

**மேடம்**

அபூர்வ சந்திப்பு, காரியம் கைகூடும், வாகனவசதி, நல்ல உணவு கிடைத்தல்.

**இடபம்**

பகைவர் விலகுவர், சுக வாழ்வு, மனமகிழ்ச்சி, காரிய நன்மை.

**மிதுனம்**

கௌரவக் குறைவு, காரிய தாமதம், குடும்பக் கவலை, தொழில் நன்மை.

**கடகம்**

அற்பர் நேசம், உறவினர் மனஸ்தாபம், காரிய நன்மை, திடீர் நன்மை.

**சிங்கம்**

இனிய சம்பவம், காரிய நன்மை, வாக்குமேன்மை, பிரயாணம்.

**கன்னி**

வாக்குவாதம், பொருள் விரயம், மாதர் நட்பு, முயற்சி தாமதம்.

**துலாம்**

ஜனவசியம், சயனசுகம், ஆழ்ந்த சிந்தை, நண்பர்கள் உதவி.

**விருச்சிகம்**

சுப செலவு, நித்திரைக் குறைவு, வீண் அலைச்சல், முயற்சி தாமதம்.

**தனுசு**

தொழில்சிந்தை, மனமகிழ்ச்சி, நண்பர்கள் உதவி, காரியம் கைகூடும்.

**மகரம்**

முயற்சி கைகூடும், தொழில் நன்மை, கீழ்ப்படிவு, சுப நிகழ்வு.

**கும்பம்**

சந்தோசம், புதிய திட்டமிடல் உடல்சோர்வு, முயற்சி தாமதம்.

**மீனம்**

வீண் தொல்லை, வியாதி, முயற்சி தடங்கல், சந்தோசக் குறைவு.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.)

வளவன்

## சுயதொழில் முயற்சிக்கு சர்வோதயம் நிதியுதவி

(தென்மராட்சி)

யாழ். மாவட்ட சர்வோதய நிறுவனம் குடா நாட்டின் பல்வேறு பாகங்களிலும் சுயதொழில் முயற்சிக்கான நிதியுதவிகளை வழங்கி வருகின்றது

அண்மையில் குடத்தனை, கொக்குவில் பகுதிகளைச் சேர்ந்த 20 பெண்களுக்கு கடன் அடிப்படையில் சுய தொழில் முயற்சிக் கடன் வழங்கப்பட்டுள்ளது.

மல்லாகம், சித்தியம்புளியடி, கணேஸ்வரம் ஆகிய பகுதிகளையும், வடமராட்சியை சேர்ந்த 70 பெண்களுக்கு அவுஸ்திரேலிய உதவித் திட்டத்தின் கீழ் சுய தொழில் முயற்சிக்கடன் வழங்கப்பட்டுள்ளது.

இக்கடன் திட்டம் விரைவில் ஏனைய பகுதிகளுக்கும் விஸ்தரிக்கப்படவுள்ளதாக சம்பந்தப்பட்டவட்டாரங்கள் தெரிவித்தன. (உ-77)

## யுத்தத்தை நிறுத்தினால் நாடுஅபிவிருத்தி அடையும்

வர்த்தக சங்கத் தலைவர் தெரிவிப்பு

(கொழும்பு)

தொடரும் யுத்தத்தை நிறுத்தினால்நாட்டின் பொருளாதாரத்தை விருத்தி செய்ய முடியும். போருக்குப்பயன்படுத்தும் நிதியை நாட்டின் அபிவிருத்திக்குப் பயன்படுத்தினால் நாடு சிறப்புடன் முன்னேறும். இவ்வாறு தேசிய வர்த்தக சங்கத் தலைவர் மைக்கல் காஷிம் கூறியுள்ளார்.

நாட்டை முன்னேற்ற வேண்டுமானால் வன்முறையை ஒழிக்கும் முகமாக சமாதானப் பேச்சை ஆரம்பிக்க வேண்டும் என்று அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

தேசிய ஏற்றுமதியாளர்களின் தலைவர் பற்றிக் அமரசிங்க கருத்து வெளியிடுகையில்;

சமாதானப் பேச்சு மூலம் முறை வெற்றி ளிக்கும் சமாதான முயற்சிகளை சகல கட்சிகளும் ஆதரிக்க வேண்டும். தென்பகுதி அரசியல் கட்சிகள் ஐக்கியப்பட்டால் விடுதலைப்புலிகள் கூட அதிக நம்பிக்கையோடு இருப்பர்கள் என்றார். (க-07)

## மதுவரி ஊழியர்மீது தாக்குதல் 5000 ரூபா பிணையில் செல்ல நீதிவான் உத்தரவு

[யாழ்ப்பாணம்]

இராசாவின் தோட்டம் பகுதியில் மது வரித்திணைக்கள உத்தியோகத்தர் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக தேடப்பட்டவரான யோகராஜா - அகிலன் என்பவரை ஐயாயிரம் ரூபா சரீரப் பிணையில் செல்லுமாறு நீதிபதி இ. த விக்கினராசா உத்தரவிட்டார்.

கடந்த 1-ஆம் திகதி நீதிபதி இ. த. விக்கினராசா முன்னிலையில் இவ் வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்ட போதே மேற்கண்ட உத்தரவை அவர் வழங்கினார். (க-06)

(பரிசுத்த ஆவியின் பெருவிழாவை முன்னிட்டு இக் கவிதை பிரசுரமாகிறது)

## அருள் தரும் ஆவி

வெறுமையாய் இருந்த உலகினில் அன்று
நீரதன் மேலே அசைந்திட்ட ஆவி
பரம்பொருள் இறைவனின் படைப்பினில் அன்று
உயிரதன் மூச்சாய் உட்சென்ற ஆவி

தேவனின்வார்த்தை மனுவுரு எடுக்க
மரியவள மீது பொழிந்திட்ட ஆவி
பகிரங்க வாழ்வில் பக்கத்தில் இருந்து
அருளினைக் கொடுத்துக் காத்திட்ட ஆவி

சிலுவை மரத்தினில் உயிரினை எடுத்து
மூன்றாம் நாளில் உயிர்ப்பித்த ஆவி
விண்ணகம்சென்ற பத்தாம் நாளில்
அக்கினி நாவாய் இறங்கிய ஆவி

காலத்தின் தேவையை அறிந்து இன்று
திருச்சபை தனையே காக்கின்ற ஆவி
புனிதமாய் வாழ்ந்து புண்ணியம் சேர்க்க
இதயத்தில் நிறைந்திடும் பரிசுத்த ஆவி

இ. அ. அமலரட்ணம்
(க.கு: அங இல. (5)

# விசாரணைகளுக்கு சமுகமளிக்க கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ் குடாநாட்டில்இருந்து 1996, 1997 ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் காணாமற் போனோர் சம்பந்தமாக விசாரணையினை நடாத்தி வரும் விசேட புலனாய்வுப்பிரிவினர் பின்வருவோர் தொடர்பான விசாரணைக்காக அவர்களின் உறவினரையும் சாட்சியினரையும் யாழ் பொலிஸ் நிலையத்துடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவித்துள்ளனர்.

★ கதிரவேலு ஜெயந்தன் (ஏ-21) நவாலி அரசடி. முறைப்பாடு:-கதிரவேலு நகுலேஸ்வரி.

★ வல்லிபுரம் பாஸ்கரன் (பி-85) மறுவன்புலோகிழக்கு சாவகச்சேரி.

★ யோன்பிள்ளை அன்ரன் அமலநாதன் [ஏ-21(2)] கோதிலு வீதி நாவற்குழி. முறைப்பாடு:-மேரி அன் கனிஸ்ரா. சாட்சி:-கோபாலசிங்கம் ஜீவாகரன்.

★ சின்னத்தி கோபாலகிருஷ்ணன். (பி-77) நாவற்குழி தெற்கு கைதடி. முறைப்பாடு:- சங்கரன் சின்னத்தி சாட்சிகள்:- சுப்பிரமணியம் சுப்பையா பரமேஸ்வரி

★ சின்னத்தம்பி சிவகுமார் (ஏ-13) நாவற்குழி வடக்கு தச்சன்தோப்பு. முறைப்பாடு:- சிவகுமார் ஜீவா

★ பெர்னாண்டோஜெயகாந்தன் (பி-130) 29/1 புங்கங்குளம் வீதி கொழும்புத்துறை. முறைப்பாடு:- பெர்னாண்டோ புஸ்பராணி ஜெசிந்தா சாட்சிகள்;- ஜெயகண்ணா சாட்சிஜினி, ஜேன்சன் அன்ராஜு, ஜெனஜா பெர்னாண்டோ, ரஜனிகாந் பெர்னாண்டோ.

★ வல்லிபுரம் பவானந்தன் (பி 21)கச்சாய்வீதி கொடிகாமம் முறைப்பாடு:-வல்லிபுரநாதன் நீலாம்பிகை சாட்சிகள்:- சின்னத்தம்பி கிறிஸ் கந்தராசா இடைக்குறிச்சி வரணி

★ சுப்பிரமணியம்சுதாகரன் (பி-18) 56.முள்ளிவீதி அரியாலை முறைப்பாடு:-சுப்பிரமணியம் கமலாதேவி சாட்சி:- ரவி

★ சதாசிவம் விவேகானந்தன் (பி 28)மட்டுவில்கிழக்கு சாவகச்சேரி முறைப்பாடு;-விவேகானந்தன் பிறேமலதா மட்டுவில் வடக்கு சாட்சிகள்:-சிவராசா சந்திரகாந்தி,மனைவி சகோதரி

★ அன்ரன் தெய்வேந்திரம் ரமேஸ் [பி 9ஏ,பி,சி)சாவகச்சேரி வடக்கு மீசாலை முறைப்பாடு:-தேவதாஸ் மகேஸ்வரி சாட்சிகள்:-இரத்தினசிங்கம் பிரியதர்சன் தெய்வேந்திரம் நாவேந்திராணி பொன்னம்பலம், சிதம்பரப்பிள்ளை சிவசுதன் சிதம்பரப்பிள்ளை தில்லையம்பலம் சிறிதரன் ராஜரத்தினம்.

★ இராசதுரை சுரேஸ்குமார் (பி-76) கல்வியங்காடு வீதி, யாழ்ப்பாணம். முறைப்பாடு:- சுரேஸ்குமார் சிவமாலை (மனைவி) விளையாட்டு வீதி, கல்வியங்காடு. சாட்சிகள்:- நவரட்ணம் பரமசிவம், நாகையா ஜெயராஜி (யாழ்ப்பாண கச்சேரி எழுதுவினைஞர்) ம கனகசூரியன் சசிகரன்: மட்டுவில்தெற்குசாவகச்சேரி. (உ- 10)

# பாடசாலை வளவுக்குள் இருக்கும் முகாம்களை அகற்றகோரிக்கை

## தமிழர் ஆசிரியர் சங்கம் விடுத்தது

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் பாடசாலை வளவுகளுக்குள் அமைந்திருக்கும் முகாம்களையும், பாடசாலைக்கு அண்மையில் அமைந்திருக்கும் சோதனைச் சாவடிகளையும் அகற்றுமாறு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் கல்வி அமைச்சரிடம் நேரடியாக கோரிக்கை விடுத்துள்ளது.

இதற்கு பதிலளித்த அமைச்சர் சில வெளி நாட்டு நிறுவனங்களும் இதனைத் தனது கவனத்திற்கு கொண்டு வந்தன வென்றும் இது தொடர்பாக வடக்கு- கிழக்கு ஆளுநரிடமும் படை அதிகாரிகளுடனும் கலந் துரையாடிப் பொருத்தமான நடவடிக்கையை எடுப்பதாகவும் கூறியுள்ளார்.

இதேவேளை, விசாரணைகளின்றி தடுப்பு முகாங்களில் பல ஆசிரியர்கள் இருப்பதாகவும் ஆசிரியர் சங்கத்தரப்பினர் எடுத்துக் கூறினர்.

தமிழர்ஆசிரியர்சங்கப்பிரதிநிதிகள் முன் வைத்த கோரிக்கைகளை உன்னிப்பாகக் கேட்ட கல்வி அமைச்சர் சுசில் பிறேம ஜெயந்தஅவைகுறித்து ஏற்ற நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவித்தார்; (து)

## இலவச மருத்துவ முகாம்

(ஊர்காவற்றுறை)

கியு மெடிக்கா நிறுவனமும் தீவக லயன்ஸ் கழகமும் இணைந்து புளியங்கூடல் நெசவு மண்டபத்தில் இலவச மருததுவ முகாம் ஒன்றினை அண்மையில் நடத்தின.

மருத்துவப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டதுடன் கண் பார்வை குறைந்தவர்களுக்குமூக்குக் கண்ணாடிகளும வழஙகப்பட்டன.

தொடர்ந்து ஒவ்வொரு வாரமும் புதன் கிழமைகளில் மாலை 4 மணிக்கு இம் மருத்துவ முகாம் இடம் பெறவிருக்கிறது. (உ-75)

## கட்டடம் திறப்பு

[யாழ்பபாணம்]

அமரர் காராள சிங்கத்தின் ஞாபகார்த்தமாக சுதுமலை சிந்மய பாரதி மகா வித்தியாலயத்தில் ஒரு புதிய கட்டடம் அண்மையில் திறந்து வைக்கப்பட்டது.

பாடசாலை அதிபர் செ: குபேந்திரநாதன்தலைமையில் இடம்பெற்ற மேற்படி நிகழ்வில் அமரரின் மகனான தொழிலதிபர் இந்திரன் குறித்த கட்டடத்தை திறந்து வைத்தார். [க]

## அடிப்படை வசதிகள் நிறைவேற்றம்

[யாழ்ப்பாணம]

சுன்னாகம் தெற்கு சபாபதிப் பிள்ளை நலன்புரி நிலையத்தில் வசிக்கும் மக்களுக்கு வேண்டிய அடிப்படை வசதிகள் அமைச்சகர் டக்ளஸ் தேவானந்தாவின் பணிப்பின் பேரில் படிப்படியாக நிறைவேற்றப்பட்டு வருவதாக நலன்புரி நிலைய நிர்வாகத்தினர் தெரிவித்தனா. [உ]

## திரைப்படக் காட்சி

[ஏழாலை]

கட்டுவன் வீதி மல்லாகம் அருள் மிகு ஞானவைரவர் ஆலய கட்டடநிதிக்கான திரைப்படக் காட்சி எதிர் வரும் செவ்வாய்கிழமை இணுவில் திரையரங்கில் இடம் பெறவுள்ளது, (க-12)

## சங்காபிஷேகம்

[புலோலி]

தும்பளை தம்புருவளை அருள்மிகு ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலய சங்காபிஷேகம் இம் மாதம் 12 ஆம் திகதி நடைபெறவுள்ளது. (உ-52)

# கஞ்சாப் பூவுடன் குடும்பப் பெண் கைது

(கொழும்பு)

நீர்கொழும்பு பிட்டிப்பான என்ற இடத்தில் கடந்த வியாழக்கிழமை வீடொன்றிலிருந்து ஏழரைக்கிலோ கஞ்சாப் பூவை கண்டெடுத்த பொலிஸார் அங்கிருந்த பெண் ஒருவரை கைதுசெய்துள்ளனர்.

தமக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து குறிப்பிட்ட வீட்டை சுற்றி வளைத்து 60 ஆயிரம் ரூபா பெறுமதியான கஞ்சாப்பூவை கைப்பற்றியுள்ளதாக நீர்கொழும்பு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார்.

குறித்த வீட்டில் கைது செய்யப்பட்ட 3 பிள்ளைகளின் தாயாரான பெண் நேற்று முன்தினம் நீதிமன்றில் ஆஜர் படுத்தப்பட்டார்; (உ-3)

# யாழ்.வலயமாணவர்களுக்கு 'சகச்சிர' புலமைப் பரிசில்

(யாழ்ப்பாணம்)

யாழ். கல்வி வலயத்திற்குட்பட்டகல்விப்பொதுத்தராதர உயர் தரத்தில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு ''சகச்சிர'' ஜனாதிபதி புலமைப் பரிசில் வழங்கப்பட்டுள்ளது

வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் நேற்று முன்தினம்நடைபெற்ற இவ் வைபவத்தில் கௌரவ விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ். மாவட்டபாராளுமன்றஉறுப்பினரும் ஈ.பி.டி.பி யின் யாழ். மாவட்ட பிரதம அமைப்பாளருமான கா.வே; குடேந்திரன் மாணவர்களுக்கு புலமைப் பரிசில்களை வழங்கினார்.

யாழ்.வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி செ. மகாலிங்கம் தலைமையில் நடைபெற்ற இவ் வைபவத்தில் பிரதம விருந்தினராக யாழ். மேலதிக அரசாங்க அதிபர் து. வைத்திலிங்கம், நல்லூர் பிரதேச சபைத் தலைவர் க. மணிபல்லவராஜன் ஆகியோர் கலந்து கொண்டனர். (உ-10)

# இருநூறு வழக்குகள் மன்னாரில் தேக்கம்

(மன்னார்)

மன்னாரில் 200க்கு மேற்பட்ட வழக்குகள் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படாமல தேங்கிக்கிடப்பதாக அம்மாவட்ட நீதிபதிதெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்; பயங்கரவாதத்தடைச்சட்டத்தின் கீழ்கைதுசெய்யப்படுபவர்களின் வழக்குகள் சம்பந்தப்பட்ட பதில்கள் சட்டமா அதிபர் திணைக்களத்திலிருந்து உரிய காலத்திற்கு அனுப்பி வைக்கப்படுவதில்லை எனவும் இதன் காரணமாகவே இவ்வாறான தேக்க நிலையுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

இவ்வாறான தகவல்கள் மற்றும் ஆவணங்கள் உரிய காலத்தில் அனுப்பி வைக்க வேண்டும் எனவும் இல்லாவிடில் அடுத்ததவணையின் போது சம்பந்தப்பட்ட வழக்குகளை தள்ளுபடி செய்யப் போவதாகவும் அவர்எச்சரித்துள்ளார்; (க-வ)

# ஆலயப் புனரமைப்புக்கு 15 இலட்சம் நிதியுதவி

[யாழ்ப்பாணம்]

கொக்குவில் மஞ்சவனப்பதி ஆலயப் புனரமைப்புக்கு முதற்கட்டமாக 15 இலட்ச ரூபா நிதியினை ஈ.பி.டி.பி. யின் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிதவராசா ஆலய பொருளாளரிடம்அண்மையில் கையளித்தார்.

ஈ.பி.டி.பி யின் யாழ். மாவட்ட தலைமைச் செயலகத்தில் கொக்குவில் மஞ்சவனப்பதி ஆலய நிர்வாகிகள் மற்றும் கொக்குவிலில் உள்ள பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் சுமார் 150 பேர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவைச் சந்தித்துப்பேச்சுவார்த்தை நடத்தினர்.

இச் சந்திப்பில் ஆலயப் புனரமைப்புக்குரிய காசோலை வழங்கப்பட்டது.

ஈ.பி.டி.பி. யின் யாழ். மாவட்ட உதவி அமைப்பாளரும்,நல்லூர் பிரதேசசபையின் தலைவருமான க. மணிபல்லவராஜனும்இதில்கலந்து கொண்டார். [உ-10]

# நீதிமன்றில் திருடியவர் பொலிஸாரால் கைது

(கொழும்பு)

தம்புத்தேகம நீதிமன்ற களஞ்சிய சாலையில் இருந்து இரண்டரை இலட்சம் ரூபா பெறுமதியான சஞ்சாவைத் திருடியவர்பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

வழக்கு விசாரணை ஒன்றின் தடயப் பொருளாக நீதிமன்றின் களஞ்சிய சாலையில் மேற்படி சஞ்சாவைக்ப் பட்டிருந்தது.

களஞ்சியப் பொறுப்பாளர் மற்றும் காவலாளியின் உதவியுடன் தான் கஞ்சாவை எடுத்ததாக கைது செய்யப் பட்டவர் தெரிவிததுள்ளார்.

இதனையடுத்துகளஞ்சியப் பொறுப்பாளர், காவலாளி ஆகியோர் கைதுசெய்யப் பட்டு தடுத்துவைக்கப்பட்டுள்ளனர். (உ-3)

# கழிவகற்றும் உறுப்புக்கள் இன்றி பிறந்த குழந்தை

## புதுக்குடியிருப்பில் சம்பவம்

[வவுனியா[

கழிவகற்றும் உறுப்புக்கள் இன்றி ஒரு குழந்தை புதுக்குடியிருப்புப் பகுதியில் பிறந்துளளது.

கடந்த 25 ஆம் திகதி விமல்ராஜ் - சுபாசினி ஆகியோருக்கு பிறந்த இக் குழந்தை பற்றி மேலும் தெரியவருவதாவது;

இக்குழந்தை வாயினாலே மலத்தை வெளியேற்றியதையடுத்து பெண்கள் மேம்பாட்டு நிறுவனத்தினர் குழந்தையையும் தாயையும் புதுக்குடியிருப்பு மாவட்ட மருத்துவ மனைக்கு கொண்டு சென்றனர்.

அங்கு மேற்கொண்ட சிகிச்சை வெற்றியளிக்காமையினால் மல்லாவி மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக வவுனியா வைத்தியசாலைக்கு தாயும் குழந்தையும் அனுப்பப்பட்டுள்ளனர். [க-05]

## மாட்டுவண்டி சவாரி

[ஏழாலை]

தெல்லிப்பழை கிறாஸ் கொப்பர்ஸ் விளையாட்டுக் கழகம் நடாத்தும் மாபெரும் மாட்டு வண்டிச் சவாரிப் போட்டி எதிர்வரும் 10 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு சுன்னாகம் கந்தரோடை சவாரி மைதானத்தில் நடைபெறவுள்ளது. [க-12]

## வீதி திருத்தம் இல்லை

(ஈச்சமோட்டை)

யாழ்ப்பாணம் கொய்யாத் தோட்ட புது வீதி மிக நீண்ட காலமாகத் திருத்தப்படாத நிலையில் சேதமடைந்து காணப்படுவதால் பொது மக்கள் பல்வேறு கஷ்டங்களுக்கு உள்ளாகி வருகின்றனர்; (உ-59)

# பிள்ளைகளைதத்துஎடுத்தல் யாழில் அதிகரிப்பு

(தென்மராட்சி)

யாழ்ப்பாணத்தில் பிள்ளைகளைதகத்தெடுத்து வளர்த்தல் இப்போது அதிகரித்து வருவதாகத் தெரியவருகின்றது.

இங்கு இயங்கிவருகின்ற பிள்ளைகள் பராமரிப்புநிலையங்களில் உள்ள பிள்ளைகளையே கூடுதலானவர்கள் பெரிதும் விரும்பித் தத்து எடுப்பதாகக் கூறப்படுகின்றது.

ஆயினும் பிள்ளைகள் பராமரிக்கும் நிலையங்களில் இருக்கின்ற பிள்ளைகள் தத்தெடுப்பவர்ளுடன் சென்று வீடுகளில் வாழ்வதை விரும்பவில்லை என்று மக்கள் மத்தியில் பரவலாக தெரிவிக்கப்படுகிறது; (க-77)

## இன்றொரு தகவல்

### இப்பொழுதே செய்யலாம்

ஒரு நாட்டை அரசன் ஒருவன் ஆண்டு வந்தான். அவன் தன் நாட்டுக்குக் கிழக்குப் பக்கம் இருந்த நாட்டையும், அதன் ஆட்சிக்குக் கொண்டுவர வேண்டும் என்று நினைத்தான். அதனால் பெரும்படை திரட்டி அந்நாட்டை முற்று கையிட்டான். பல நாட்கள் கடும் போர் நடந்த பின்னர் அந்நாட்டைக் கைப்பற்றினான் வெற்றி வீரனாகத் திரும்பும் தம் அரசனை வரவேற்க நாடே விழாக்கோலத்துடன் காட்சியளித்தது.

நாடு திரும்பிய அரசன் தலை நகரத்தில் இருந்த துறவிஒருவரின் அருளாசியைப் பெற அவரிடம் சென்றான். அரசனை வரவேற்ற 'துறவி 'உன் எண்ணம் நிறைவேறியது இப்பொழுது மகிழ்ச்சிதானே' என்றார். துறவியாரே! என் முன்னோர்கள் யாராலும் சாதிக்க முடியாத செயலைச் செய்துள்ளேன். என் மகிழ்ச்சிக்குக் கேட்கவா வேண்டும்? தங்கள் ஆசியை நாடிவந்துள்ளேன்' என்றான் அரசன்.

அதற்குத் துறவி 'உன் அடுத்த திட்டம் என்ன?' என்று கேட்டார். 'இனி மேற்குப் பக்கத்திலுள்ளநாட்டை என் ஆட்சியுடன்இணைப்பது தான்' என்றான் அரசன். 'அதற்குப் பிறகு என்னசெய்வதாகத் திட்டம்' என்றுகேட்டார் துறவி. 'இன்னொருபக்கம் உள்ள நாட்டையும் வெல்வது தான்' 'அதற்குப் பிறகு? என் நாட்டைச் சுற்றியுள்ள நாடுகள் எல்லாம் என் ஆட்சிக்கு உட்பட்டு இருக்கும். அதன் பிறகு அமைதியாகவும் மகிழ்ச்சியாகவும் நாட்டை ஆளுவேன்' என்றான் அரசன். 'அமைதியாகவும் மகிழ்ச்சியாகவும் நாட்டை ஆளுவது தான் உன் திட்டம் என்றால் அதை நீ எப்பொழுதோ செய்திருக்கலாமே! அடுத்த நாட்டின் மீது படையெடுத்து இரு நாட்டு வீரர்களும் போர்க்களத்தில் இறந்திருக்க வேண்டாமே!' என்று சொன்னார் துறவி. இதைக் கேட்டதும் அரசனின் அறிவுக்கண் திறந்தது துறவியைப் பணிந்து விடை பெற்றான்.

பேராசிரியர் எ.சோதி

# தொடரும் யுத்தத்தை அரசாங்கம் முடிவிற்கு கொண்டு வந்தே தீரும்

## ஜனாதிபதி நம்பிக்கை

(கொழும்பு)

அரசாங்கம் யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவரும், சமாதானத்தைஏற்படுத்தும், அதற்கான சட்டதிட்டங்களை அமுல் செய்யும் என்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

கம்பளையில் அபிவிருத்தித் திட்டங்களை நேற்று முன்தினம் ஆரம்பித்து வைக்கையிலேயே இவ்வாறு அவர் உரை நிகழ்த்தியுள்ளார்.

ஜனாதிபதி மேலும் உரையாற்றுகையில்; நாட்டின் சமாதான முயற்சியில் சகல மக்களும் தமது பேதங்களை மறந்து ஒத்துழைக்க வேண்டும். விடுதலைப்புலிகளின் தலைவர் வே பிரபாகரனும் பேச்சுவார்த்தைக்கு அழைக்கப்படுவார். மேலும் சமாதான முயற்சிகளுக்கான எல்லா ஆயத்தங்களும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தேசிய மட்டத்தில் மாத்திரமல்ல, சர்வதேச மட்டத்திலும் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது சமாதானப் பேச்சில் விடுதலைப்புலிகளை இணைத்துக்கொள்ளவேண்டுமென்று சர்வதேச நாடுகள் வற்புறுத்தி வருகின்றன என்றார். (க-07)

## கள்ளுத் தவறணையில் கைகலப்பு; ஒருவர் காயம்

(மந்திகை)

கட்டைவேலி, பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்திற்குட்பட்ட அல்வாய்க் கிளையில் கடந்த செவ்வாயன்று மாலை இடம் பெற்ற இச் சம்பவத்தில்,

கள் அருந்திக் கொண்டிருந்த சமயம் இருவருக்கிடையே ஏற்பட்ட வாய்த் தர்க்கம் கைகலப்பாக மாறியதில் வெட்டுக் காயங்களுடன் ஒருவர் பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அல்வாய் கிழக்கைச் சேர்ந்த கருணைப்பிரகாசம் தவராசா [வயது-26[ என்பவரே காயமடைந்தவராவார். (உ-23)

## மெய்வல்லுநர் போட்டி

(ஊர்காவற்றுறை)

தேசிய இளைஞர் சேவைகள் மன்ற யாழ். மாவட்ட இளைஞர் கழகங்களுக்கிடையிலான மெய்வல்லுநர் போட்டிகள்.

எதிர்வரும் 9, 10 ஆம் திகதிகளில் யா/ பல்கலைக் கழக மருத்துவபீட மைதானத்தில் இடம் பெறவுள்ளதாகத் தேசிய இளைஞர் சேவைகள் மன்ற யாழ். மாவட்ட அலுவலக வட்டாரங்கள தெரிவித்துள்ளன. (உ-75)

## சிசுமரண வீதம் என்றும் இல்லாதவாறு வன்னியில் அதிகரிப்பு

(வவுனியா)

கடந்த இருவருடங்களில் முழங்காவில் பகுதி மருத்துவமனையில்46 சிசுக்கள்இறந்து, பிறந்துள்ளதாக இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப் பகுதியின் புள்ளிவிபரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தாய்மாரின் போஷாக்கின்மை, மற்றும் நோய்ப் பாதிப்புகள் காரணமாகவே இவ்வாறான சிசுமரண வீதம் அதிகரித்திருப்பதாகச் சுகாதாரத் தகவல்கள் சுட்டிக்காட்டுகின்றன.

1999 ஆம் ஆண்டில் 28 சிசுக்களும், 2000 ஆம் ஆண்டில் 18 சிசுக்களும் இறந்துள்ளன.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள வன்னிப் பகுதிக்கு அரசு கடைப்பிடித்து வரும் பொருளாதாரத் தடைகளே இவ்வாறான சம்பவங்களைப் பெருக்கி வருகின்றன என்று கருதப்படுகிறது. (உ-5)

## உணவு விடுதிகளை மூடிவிட உத்தரவு

(கொழும்பு)

சுகாதார முறைகேடு காரணமாக வவுனியாவில் இரண்டு உணவு விடுதிகளை மூடி விட மாகாண சுகாதாரப் பணிப்பாளர் திருமதி எஸ். லோகநாதன் உத்தரவிட்டுள்ளார்.

தண்ணீர் வசதியின்மை, அசுத்தமான சமையல் பாத்திரங்கள், நாட்சென்ற உணவுப் பொருட்களையும், பழுதடைந்த உணவுப் பொருட்களையும் விற்பனைக்காக வைக்கப்பட்டமை முதலிய காரணங்களினாலேயே மேற்படி உணவு விடுதிகளை மூடிவிட உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

கடந்த வாரம் அனுஷ்டிக்கப்பட்ட சுகாதார வாரத்தில் மாகாணச் சுகாதாரப் பணிப்பாளர் திருமதி எஸ். லோகநாதன்தலைமையிலான சுகாதாரப் புலனாய்வுப் பிரிவினரின் தீவிரப் பரிசோதனையிலேயே இந்தஉணவுவிடுதிகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-7)

## ஆசிரியையின் தாக்குதலால் மாணவனின் பார்வை பறிபோனது

(கொழும்பு)

ஆசிரியையின் கண்மூடித்தனமான தடியடிக்கு ஆளான மாணவன்தனதுஒரு கண்பார்வையை இழந்த சம்பவம் சோளபுரம் அல்அமீன் மகா வித்தியாலயத்தில் இடம் பெற்றுள்ளது.

தரம் 4 இல் கல்வி கற்கின்ற மேற்படி மாணவனை வகுப்பாசிரியை தடியால் அடித்த போது தடி கண்ணில் குத்தியதனால் பார்வையை இழக்க வேண்டி நேர்ந்ததாகக் கூறப்படுகிறது.

பாதிக்கப்பட்ட மாணவனின் பெற்றோர் இதனை ஜனாதிபதியின் கவனத்திற்கு தெரிவித்துள்ளனர். (உ-து)

## கைகலப்பில் காயம்

(மந்திகை)

உறவினர்களுடன் ஏற்பட்ட கைகலப்பில் காயமடைந்த ஒருவர் பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நாகர் கோவிலிலிருந்து இடம் பெயர்ந்து பருத்தித்துறை இலட்சுமணன் தோட்டமுகாமில் தங்கியுள்ள முத்தையா பத்மநாதன் (வயது 47) என்பவரே காயமடைந்தவர் ராவார். (உ-23)

## வேலணை விவசாயிகளுக்கு கடன் அடிப்படையில் இருசில்லுஉழவுஇயந்திரம்

(ஊர்காவற்றுறை)

வேலணை கமநல சேவை நிலையத்தின் கீழ் உள்ள விவசாயிகள் கடன்அடிப்படையில் இருசக்கர உழவியந்திரத்தினைப் பெறலாம என்று கமநல சேவை நிலைய வட்டாரங்கள் தெரிவித்தன.

அனலைதீவு, ஊர்காவற்றுறை, புளியங்கூடல், நாரந்தனை, வேலணை ஆகிய பகுதிகளின்விவசாயிகள மேற்படி கமநலசேவை நிலையத்தினூடாக குறித்த உழவியந்திரத்தினை 6 மாதகாலக் கடன் அடிப்படையில் பெறலாம்.

இரண்டு லட்சத்து ஐம்பதாயிரம் ரூபா பெறுமதியான இந்த உழவுஇயந்திரத்தினைப் பெற விரும்புவோர் விவசாய சம்மேளனத்தினூடாக வேலணை கமநல சேவை நிலையத்துடன் தொடர்பு கொள்ளுமாறு பெரும்பாக உத்தியோகத்தர் தெரிவித்துள்ளார். (உ-75)

## பனம் கைப்பணிப் பொருட்களை விரும்பும் படையினர்

(தென்மராட்சி)

யாழ்ப்பாணத்திலுள்ள பாதுகாப்புப்படையினர் மத்தியில் இங்கு செய்யப்படும் பனங்கைப்பணிப் பொருட்களுக்கு பெரிய வரவேற்பு ஏற்பட்டுள்ளது.

லீவில் தமது சொந்த இடங்களுக்குச் செல்கின்ற இராணுவ அதிகாரிகள், வீரர்கள் பனங்கைப்பணிப் பொருட்களை பெரும்பாலும் வாங்கிச் செல்கின்றனர்.

இதனால் பனை அபிவிருத்திச் சபையின் வடமராட்சி, நல்லூர், நெடுந்தீவுப் பகுதிகளில் இருக்கும் பனங்கைப் பணிப் பொருள் நிலையங்களில் விற்பனை அதிகரித்துள்ளது. (உ-77)

## பால்மா விநியோகம்

(மந்திகை)

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச செயலர் பிரிவில் உள்ள இடம் பெயர்ந்தோர் முகாம்களில் வசிக்கும் சிறுவர்களுக்கு பால்மா விநியோகிக்கப்பட்டு வருகிறது.

முகாம்களில் தங்கியுள்ள ஒரு வயது தொடக்கம் 12 வயது வரையிலான பிள்ளைகளுக்கு, கியுடெக் நிறுவனத்தின் உதவியுடன் கரவெட்டி பங்குத்தந்தை யேசுரட்ணம் அடிகளாரால் பால்மா வழங்கப்பட்டு வருகிறது. (உ-23)

## கடற்றொழிலாளர் கலந்துரையாடல்

[யாழ்ப்பாணம]

வடபகுதி கடற்றொழிலாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள தொடர்பான கலந்துரையாடல் எதிர் வரும் 8 ஆம திகதி வெள்ளிக்கிழமை கொழும்பு கடற்றொழில் அமைச்சில நடைபெறவுள்ளது.

வடக்கின் அபிவிருத்தி புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் ஏற்பாட்டிலான இக்கலந்துரையாடல் கடற்றொழில நீரியல் வளத்துறை அமைச்சர் மகிந்த ராஜபக்ஷ தலைமையில இடம்பெறும்.

இக் கலந்துரையாடலில் பங்கு கொளவதற்கு யாழ் குடாநாட்டிலிருந்து செல்லும பிரதிநிதிகளுக்கான பயண ஒழுங்குகளை வடமாகாண கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம மேற் கொண்டு வருகின்றது. [உ-43]

## நிலையியல் குழுக்கூட்டம அடுத்த வாரம் கொழும்பில்

(கொழும்பு)

சார்க்நிலையியல்குழு அடுத்த மாதம் 8 ஆம், 9 ஆம் திகதிகளில் கொழும்பில் கூடவிருக்கின்றது.

இக் கூட்டத்தில் பிராந்திய அமைப்பின் 11 ஆவது உச்சி மாநாட்டை நேபாளத்தில் நடத்துவது பற்றி ஆராயப் படவுள்ளது.

இந்தியா, பாகிஸ்தான்உட்பட சில நாடுகளை இந்த நிலையியல் குழுக்கூட்டத்தில் கலந்து கொள்ள விடுத்த அழைப்பை அந் நாடுகள் ஏற்றுக் கொண்டுள்ளதாக இலங்கையின் வெளியுறவு அமைச்சர் லக்ஸ்மன கதிர்காமர்தெரிவித்துள்ளார்.

மேற்படி குழுக் கூட்டத்தில் ஒருங்கிணைந்த செயல் திட்டங்கள் பொருளாதார ஒத்துழைப்பு, சட்ட விவகாரம் சமூக தொலைத் தொடர்பாடல் முதலான பிராந்திய விடயங்கள் குறித்து மறுபரிசீலனை செய்யப்படுமெனவும்

அமைச்சரவைச்செயலாளர் மட்ட உத்தேச சார்க்கூட்டங்கள் பற்றியும் தீர்மானம்மேற்கொள்ளப்படும்.

என்றும் அமைச்சரவை வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-7)

## செயற்குழுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண ஆசிரியர் சங்கச் செயற்குழுக கூட்டம் இன்றுமு.ப. 10 மணிக்கு கந்தர்மடத்திலுள்ள சங்கச்செயலகத்தில் சா. தியாகலிங்கம் தலைமையில் இடம் பெறவுள்ளது.

வடமாகாண ஆசிரியர் சங்கம் முன்னெடுத்த, முன்னெடுக்கவுள்ள பலவேறு விடயங்கள் தொடர்பாக இக் கூட்டத்தில் ஆராயப் படவுள்ளதாகச் சங்கச் செயலாளர் அ.பாலச்சந்திரன் தெரிவித்தார். (உ)

## பார்தீனியம் பரவுகிறது

(தென்மராட்சி)

புத்தூர் நிலாவரைப் பகுதியில பார்தீனியச் செடிகள பெருமளவில வளர்ந்துள்ளன. ஆயினும் இச் செடிகளை அழிப்பதற்கான எந்தவிதமான முயற்சியும் எடுக்கப்படவில்லை.

இப்பகுதி விவசாயிகள் மத்தியில ஆச் செடியினால் ஏற்படக்கூடிய ஆபத்துக்கள் பின்விளைவுகள் குறித்து எத்தகைய விழிப்புணர்வு விளக்கமும அளிக்கப்படவில்லை. (உ-77)

# வாஜ்பாய் அரசில் இருந்து சமதாக்கட்சி விலக முடிவு

(புதுடில்லி)

இந்திய தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசில் இருந்து சமதாக் கட்சி விலகுவதற்கு முடிவு செய்துள்ளது.

பிரதமர் வாஜ்பாய் அரசின் தேசிய ஜனநாயகக் கூட்டணியில் முக்கிய கட்சியாக விளங்கும் சமதாக்கட்சி விலகுவதாக எடுத்திருக்கும்முடிவை அடுத்து வாஜ்பாய் அரசு பெரும் நெருக்கடிக்கு தள்ளப்பட்டுள்ளது.

சமதாக் கட்சியின் தேசிய அமைப்பாளர் முன்னாள் பாதுகாப்புஅமைச்சர் ஜோர்ச் பெர்னான்டஸ் வாஜ்பாய் அரசிலிருந்து விலகுவதான முடிவு அரசியலில் தேசிய நெருக்கடியைதோற்றுவிக்கும் என அரசியல் ஆய்வாளர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

ஜோர்ஜ் பெர்னான்டஸ் ஆயுதபேர ஊழலினால் அமைச்சர் பதவியை துறந்தவர். இவரது கட்சியான சமதாக் கட்சி தேசிய ஜனநாயகக் கூட்டணியில் 12பாராளுமன்ற உறுப்பினர்களை கொண்டது.

இவ்வேளையில் சமதாக் கட்சி விலகுவதாக முடிவெடுத்திருப்பது வாஜ்பாயின் தேசிய ஜனநாயகக் கூட்டணி-யை ஆட்டம் காண வைத்துள்ளது.

சமதாக்கட்சி தேசிய ஜனநாயகக் கூட்டணியிலிருந்து விலகுவதுதொடர்பானஇறுதி முடிவை தெரிவிக்கவும் அது பற்றி பரிசீலிக்கவும் நாளை மறுதினம் கூடி ஆராயவுள்ளதாக நேற்று கட்சி வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## 20 வருடங்கள் வாய் பேசாதவர் பேசும் சக்தி பெற்றார்

(பொஸ்டன்)

20 வருடங்கள் வாய் பேச முடியாது இருந்தவர் மீண்டும் பேசும் சக்தியைப் பெற்றுள்ளார்.

40 வயதுடைய திமோதி ஹெய்ட்லர் என்பவர் 20 வருடங்களின் முன் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் அகப்பட்டு குரல்வளை நசிந்த நிலையில் பேசும் சக்தியை இழந்தார்.

இந்நிலையில் கடந்த 3வருடங்களுக்கு முன் அவருக்கு மேற்கொள்ளப்பட்ட சத்திரசிகிச்சையின் பின்னர் தற்போது நன்றாகப் பேசவும் பாடவும் அவரால் முடிகிறது. (உ-3)

## அரசுப் படைகள் தாக்குவதால் பணயக் கைதிகளை விடமாட்டோம்

[மணிலா]

பிலிப்பைன்ஸில் பணயக் கைதிகளைப் பிடித்து வைத்திருக்கும் முஸ்லிம் தீவிர வாதிகள் மீது அரசுப்படைகள் தாக்குதல் தொடுத்துள்ளன.

அரசு தங்களுக்கெதிராகத் தாக்குதல் நடத்தும் வரை பணயக் கைதிகளை விடுவிக்கப் போவதில்லையென்றும் பணயக்கைதிகளைக்கொன்று விடப் போவதாகவும் தீவிர வாதிகள் தனியார் வானொலி மூலம் அறிவித்துள்ளனர்.

இதேவேளை அரசு உடனடியாக தீவிரவாதிகள் மீது தொடுத்துள்ள தாக்குதலை நிறுத்த வேண்டும்என்று பணயக் கைதியாக இருக்கும் பிலிப்பைன்ஸ்பிரஜை ஒருவர் வானொலியில் தெரிவித்தார்.

இதற்கிடையில் இரு பணயக் கைதிகளைத் தீவிர வாதிகள் கொன்று விட்டதாக உறுதியற்ற செய்திகள் தெரிவிக்கின்றன. (து)

## வாஹிட் மீதானவிசாரணை ஒகஸ்ட் மாதம் நடைபெறும்

(ஜகார்த்தா)

இந்தோனேசிய அதிபர் அப்துல் ரஹுமான் வாஹிட் மீதான லஞ்ச ஊழல்குற்றச்சாட்டு விசாரணைகள் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதி ஆரம்பமாகவுள்ளன.

ஊழல் மற்றும் திறமையின்மை காரணமாக அதிபர்மீது நாடாளுமன்றில் நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிறைவேறிய 24 மணித்தியாலங்களுக்குள் கூடிய,மக்கள் ஆலோசனைச் சபை மேற்படி முடிவை எடுத்துள்ளது.

இதேவேளை, தன்மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களை வன்மையாக மறுக்கும் அதிபர் வாஹிட், அக்குற்றச்சாட்டுக்கள் உள்நோக்கம் கொண்டவை எனக் கூறியுள்ளார். (உ-9)

## மாற்றுக் கட்சியினருக்கும் புதுவையில் அமைச்சர்பதவி

(பாண்டிச்சேரி)

புதுவை அமைச்சரவையில் பிற கட்சியினரும் இடம் பெறவுள்ளனர்.

புதுடில்லி சென்றுசோனியா காந்தி மற்றும் பிரமுகர்களுடன் கலந்தாலோசித்துவிட்டு வந்த முதல்வர் சண்முகம் காங்கிரஸ் சார்பாக இரண்டு பேரும் த.மா.கா. சார்பாக ஒருவரும் அ.இ.அ.தி.மு.க. சார்பாக ஒருவரும் அமைச்சரவையில் இடம் பெறுவார்கள் என்று செய்தியாளர்கள் மத்தியில் பேசும்போது தெரிவித்தார். [து]

## 62 வயதில் அம்மாவான பிரான்ஸ் நாட்டுப் பெண்

[பரிஸ்]

பிரான்ஸ்நாட்டைச் சேர்ந்த 62 வயதுப் பெண்ணொருவர் கடந்த மே 14ம் திகதி அழகியஆண் குழந்தை ஒன்றை பெற்றுள்ளமை அனைவரையும் வியப்பிற்குள்ளாக்கியிருக்கிறது.

'லெஸ்றியேஸ் கிளினிக்' என்னும் வைத்தியசாலையில் பிறந்த இக்குழந்தையின் நிறை 3 கிலோ ஆகும்.

குழந்தையின் பெற்றோர் பிரான்சில் தடை செய்யப்பட்டகருவளர்ச்சிசிகிச்சையை செய்துள்ளார்கள் என்ற சந்தேகத்தின் பேரில் இவர்களின் மீது வழக்கு தொடரப் போவதாக பிரான்ஸ் அரசு அறிவித்துள்ளது

இவ்வகையானகரு வளர்ச்சி சிகிச்சைக்கு அயல் நாடுகளான இத்தாலியிலும், இங்கிலாந்திலும் தடை இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. [உ-97]

## ஐ. நா. வாகனம் மீது இஸ்ரேல் தாக்குதல்

சிரியா இஸ்ரேல் மற்றும் லெபனான் எல்லைகளுக்கு மத்தியில் உள்ள சர்ச்சைக்குரிய சபாஹ் பண்ணைப் பகுதியில் ரோந்து சென்ற ஐ.நா. வாகனம் மீது இஸ்ரேல் படைகள் துப்பாக்கிப் பிரயோகம் செய்துள்ளதாக உறுதிப்படுத்தப்பட்ட செய்திகள் தெரிவிக்கின்றன.

ஐ.நாவின் மோதல்தவிர்ப்பு கணகாணிப்புப் பிரிவின் வாகனமே இவ்வாறு துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கானதாகும்.

எனினும் மேற்படிச் சம்பவத்தில் எவரும் காயமடையவில்லையென ஐ.நா வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (உ-9)

## ஹெரோயின் மீட்பு

(சென்னை)

36 கோடி ரூபா பெறுமதியான ஹெரோயின்போதைப் பொருள்தமிழ்நாடு திருநெல்வேலியில் கைப்பற்றப்பட்டுள்ளது.

திருநெல்வேலி மாவட்டத்தில் கடற்கரைக் கிராமமொன்றிலே மேற்படி போதைப் பொருள் மீட்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுவரை சந்தேக நபர்கள் எவரும் கைது செய்யப்படவில்லை யென்று அரசு தரப்பு செய்திகள் தெரிவிக்கின்றன. (து)

## நேபாள...

[1ம் பக்க தொடர்ச்சி]

32 வயதிற்கு முன்னர் திருமணம் புரிந்தால் உயிருக்கு ஆபத்து ஏற்படும் என்றசோதிடக் கணிப்பினால் விரக்தியடைந்த நிலையில் இக்கொலைகளை அவர் செய்திருக்கலாம் என்று நம்பப்படுகிறது.

கொலையுண்ட மன்னர் பிரேந்திராவுக்கு வயது 55 1945 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 6 ஆம் திகதி பிறந்த இவர் 1972 ஆம் ஆண்டில் இந்துமதத்தை அரசமதமாகவும் 2 கோடி 20 இலட்சம் சனத்தொகையும் கொண்ட நேபாள நாட்டின் மன்னராக முடிசூடப்பட்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

மன்னரின் இறப்பையடுத்து புதிய மன்னரைத் தேர்ந்தெடுப்பதற்கு அரசவை விரைவில் கூடவுள்ளதாகவும்,

மறைந்த மன்னரின் சகோதரன் ஜினேந்திரா மன்னராக முடிசூடப்படலாம் எனவும் அரச துறைத் தகவல்கள் தெரிவித்துள்ளன.

இதேவேளை, மன்னர் பிரேந்திரா மற்றும் அவரது குடும்பத்தவர்களது இறப்பு குறித்து உலக நாடுகளின் தலைவர்கள் தமது அனுதாபங்களை நேரடியாகவும், ஊடகங்கள் மூலமாகவும் வெளியிட்டு வருகின்றனர்.

இது இவ்வாறிருக்க, இக்கொலைகளுக்கு காரணமானவரான இளவரசர், திப்பேந்திரா ஆபத்தான நிலையில் உள்ளதாகவேறோர்ஏஜென்சி தகவல் தெரிவித்துள்ளது.

### விசேடமாநாடு

நேபாள மன்னர் பிரேந்திராவின் படுகொலைச் சம்பவத்தையடுத்து இந்திய பிரதமர் அடல்பிஹாரி, வாஜ்பேயின் தலைமையில் விசேட மாநாடு இடம் பெற்றதாகவும் பாதுகாப்பு ஏற்பாடுகள் தொடர்பாக ஆராயப்பட்டதாகவும் இந்திய நண்பகல் செய்தி நேற்று தெரிவித்துள்ளது. (உ-7)

## உலக தரிசனம்

## வளர்முக நாடுகளுக்கு குறைந்த விலையில் மருந்து விநியோகம்

(லண்டன்)

மருந்து உற்பத்தி செய்யும் நிறுவனங்கள் தாம் உற்பத்தி செய்யும் மருந்துகளுக்கு இரண்டு விலைகளைநிர்ணயித்து வளர்முக நாடுகளுக்கு மிகக்குறைந்த விலையில் விநியோகம் செய்ய முன்வர வேண்டும் என பிரிட்டிஷ் அரசு கேட்டுள்ளது.

வளர்முக நாடுகளில் வசிக்கும் பொருளாதார வசதி குறைந்த மக்கள் தமக்குத் தேவையான மருந்துகளை குறைந்த விலையில் பெற மேற்படி நிறுவனங்கள் வழி செய்ய வேண்டும் எனவும் பிரிட்டிஷ் அரசு மேலும் கேட்டுள்ளது. (உ-9)

## இந்தியாவில் சிறைப்பிடிக்கப்பட்ட இல. மீனவர் 74 பேரை விடுவிக்க கடும் முயற்சி

(புதுடில்லி)

இந்தியாவில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 74 இலங்கை மீனவர்களையும் விடுவிப்பதற்கு கடற்றொழில் அமைச்சர் மகிந்த இராஜபக்ஷ இந்தியத் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடாத்தியிருப்பதாகவும் அம்மீனவர்களுக்கும் பொது மன்னிப்பு அளித்து விடுதலை செய்யுமாறும் கேட்கவுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

அமைச்சர் மகிந்த இராஜபக்ஷ செய்தியாளர் மத்தியில் பேசும்போது மேலும் தெரிவிக்கையில்,

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்கள் நடாத்துவதற்கு இலங்கை அரசு தயாராக இருந்த போதும், அவர்கள் சமாதானப் பேச்சுவார்த்தைக்கு முன் நிபந்தனை விதித்துள்ளார்கள் என்றும் தெரிவித்துள்ளார். (ம)

## தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் 16 அப்பாவிப் பொதுமக்கள் பலி

(ஜெருசலேம்)

இஸ்ரேல் இரவு விடுதி ஒன்றில் பலஸ்தீனத்தற்கொலைப் படையாளி மேற்கொண்ட குண்டுத் தாக்குதலில் 16 பேர் கொல்லப்பட்டனர்.

81 பேர் காயமடைந்தனர். இவர்களில் 26 பேர் கவலைக்கிடமான நிலையில் உள்ளதாகக் கூறப்படுகிறது.

கடந்த 8மாத காலத்தில் இஸ்ரேலுக்கும் பலஸ்தீனத்திற்கும் இடையில் இடம்பெற்ற மோதல்களிலும் பார்க்க இத்தற்கொலைத் தாக்குதலே பாரிய இழப்பை ஏற்படுத்தியுள்ளதென அரசியல் நோக்கர்கள் தெரிவித்துள்ளனர்.

இத்தாக்குதல்தொடர்பாக அமெரிக்கஜனாதிபதியோர்ச் டபிள்யூ.புஷ் கண்டனம் தெரிவித்துள்ளதுடன், பலஸ்தீனத் தலைவர் யசீர் அரபாத்தை உடனடிப்போர் நிறுத்தம் செய்யுமாறு கேட்டுள்ளார்.

இதற்கானஎந்தவித காரணமும் ஏற்றுக்கொள்ளப்படாதெனக் கூறிய அமெரிக்க அதிபர் பொதுமக்கள் அநியாயமாகச்சாவதை உலக நாடுகள் ஏற்றுக்கொள்ளமாட்டாது எனவும் தெரிவித்துள்ளார். (உ-7)

## கடன் அடிப்படையில் நீரிறைக்கும் இயந்திரங்கள்

[ஊர்காவற்றுறை]

வேலணை கமநல சேவை நிலையத்தினால் இவ்வருடம் ஆரம்பத்தில் இருந்து மே மாதம் இறுதி வரை கடன் அடிப்படையில் விவசாயிகளுக்கு 63 நீர் இறைக்கும் இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

வேலணை கமநல சேவை நிலையத்திற்கு உட்பட்ட பகுதிகளான அனலைதீவு, வேலணை, புளியங்கூடல், நாரந்தனை, ஊர்காவற்றுறை ஆகிய இடங்களில் உள்ள, விவசாயிகள் சம்மேளனத்தினூடாகவே ஒருவருடக் கடன் அடிப்படையில் இந் நீர் இறைக்கும் இயந்திரங்கள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.

இதேவேளை,

இக்காலப் பகுதியில் கிருமிநாசினி தெளிகருவிகள் பத்தும் கடன் அடிப்படையில் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளதாக வேலணை கமநல சேவை நிலையத்தின் பெரும்பாக உத்தியோகத்தர் தெரிவித்தார்.

வேலணை கமநல சேவை நிலையத்தின் கீழ் 16 விவசாயிகள் சம்மேளனங்கள் தற்பொழுது இயங்கி வருவது குறிப்பிடத்தக்கது. (உ-75

கர்வம் கோபம் காமம் இவை
இல்லாத அரசரது செல்வம்
மதிப்புடையதாகும்.
குறள்

# வலம்புரி

## நேபாளம் தந்த சோகம்

உலகின் ஒரே ஒரு இந்து நாடு நேபாளம். இந்து தர்மம் தலை நிமிர்ந்து நின்ற அந் நாட்டில் மன்னர் பிரேந்திராவும் அவரது குடும்பந்தினரும் பெற்ற மைந்தனால் சுட்டுக் கொல்லப்பட்டார்கள் என்ற சோகம் உலகையே உலுப்பி விட்டது.

தன்னுயிர் ஈந்து பிறர் உயிர் காக்கும் தெய்வீகம் பொருந்திய நேபாள ஆட்சியில் கணப்பொழுதில் நடந்தேறிய சம்பவம் தன்னுயிர் ஈந்து பிறர் உயிர் காக்கும் இந்து தர்மத்தையேஒரு கணம் உறைய வைத்து விட்டது.

இறை நம்பிக்கை மிகுந்த நேபாள மக்களுக்கு ஏற்பட்ட இச் சோகம் மிகவும் வேதனைக்குரியது. மன்னராட்சியிலும் மக்களாட்சி என்ற நிலைக்கு வித்திட்ட மன்னர் பிரேந்திராவுக்கும், அவரது குடும்பத்தவர்களுக்கும் நேர்ந்த கதி ஆயுதத்தின் கலாசாரம். தந்தை, தாய், சகோதரம் என்ற உறவுகளெல்லாம் கடந்து அதிரடித்தண்டனைக்கு வித்திட்டுள்ளதையே உணர்த்துகிறது.

பொறுமைக்கும், நிதானத்திற்கும் இடங்கொடுப்பதற்கு முன்னதாக துப்பாக்கிகள்பேசத் தொடங்கினால் உலகம் எவ்வகையிலும் இயங்க முடியாது போய்விடும்.

இறப்பென்பது மனிதனின் பிறப்புரிமை, அதனை யாராலும் தடுத்து நிறுத்த முடியாது. மனிதனின் பல் வேறு உரிமைகள் கேட்டும், போராடியும் பெறவேண்டியிருக்கலாம். ஆனால் மரணமென்ற உரிமை இயற்கையால் வழங்கப்படவேண்டிய தொன்று. அதற்கும் காலமும், வயதும் கருத்திற் கொள்ளப்படுகிறது. இதனை விடுத்து பிறப்புரிமையாகிய மரணத்தை யார் வழங்க முற்பட்டாலும் அஃது மேன் முறையீடு இல்லாத தீர்ப்பாகி விடும்.

அத்தகைய மேன் முறையீடு இல்லாத தீர்ப்பையே இளவரசர்திபேந்திராவின் துப்பாக்கி மன்னர் பிரேந்திரா உள்ளிட்ட பதினொரு பேருக்கு வழங்கி விட்டது.

இந்து நாட்டு மன்னர் குடும்பத்தின்இறப்பு உலக ரீதியில் தீராதசோகத்தை வேதனையை ஏற்படுத்தியிருப்பினும், உலகளாவிய இந்து மதத்திற்கு - இந்து தர்மத்திற்குமன்னர்குடும்பத்தின் அகால மறைவு நீங்காத துன்பத்தை வழங்கி விட்டதென்பதே உண்மையாகும்.

---

### பரமபிதா காட்டிய பாதை

## பரிசுத்த ஆவியை நிறைவாகப் பெறுவதற்கு

# இறைமகனூடாக இறைவனிடம் மன்றாடுவோம்

**இ. அ. அமலரட்ணம்**



சகலவல்லமைபொருந்திய இறைவனின் படைப்புக்கள் எல்லாம் இயங்குவதற்கு ஆற்றல் தேவையாக உள்ளது. இந்த ஆற்றல் அல்லது சக்தி இல்லை என்று சொன்னால் உலகின் இயக்கமே இல்லை என்று சொல்லலாம். நாம் எமது அன்றாட வாழ்வில் இயங்குவதற்கு சக்தி எவ்வளவு முக்கியமானதோ: அது போல கிறிஸ்தவர்களாகிய நாமும், திருச்சபையும் ஆன்மீக வாழ்வில் இயங்குவதற்கு தூய ஆவியின் அருள் உயிர் அவருடைய கொடைகள் அவர் தருகின்ற கனிகள் மிக, மிக முக்கியமானதாக இருக்கின்றன.

### தூய ஆவி

படைப்பின் காலத்தில் இருந்தே. அதாவது உலகம் வெறுமையாய் இருந்த பொழுதே அருள் தரும் தூய ஆவி, நீரின் மேல் அசைந்தாடிக் கொண்டிருந்ததாய் தொடக்க நூல் கூறுகின்றது. தொடர்ந்து இறைவனின் மீட்புத் திட்டத்தில் தூயஆவியின் செயற்பாடுகள் அவரின் வழி நடத்தல்கள் ஞானம் நிறைந்த வெளிப்பாடுகளை வேதாகமத்தில் காணக்கூடியதாக உள்ளது. மீட்புப் பயணத்தில் விசுவாச உறுதியையும் அரசர்கள் வாழ்வில் நேரிய ஞானத்தையும் இறைவாக்கினர்களுக்கு அறிவு செறிந்த இறைவாக்குரைக்கும் திறமையையும் தூயஆவி நிறைவாகக் கொடுத்ததை நாம் காண்கின்றோம்.

### இறைமகன்

வார்த்தை மனுவுருவான வேளை; புனிதகன்னிமரியாள் மீது பொழியப்பட்டதில் இருந்து, இறைமகன் கிறிஸ்துவின் மறைந்த வாழ்விலும் விசேடவிதமாக அவரின் பகிரங்கப் பணி வாழ்விலும் பக்கத்தில் இருந்து தூய ஆவி வழிநடத்திச் செல்கின்றது இறைமகன் கிறிஸ்து இறைவனின் மீட்புத் திட்டத்தை இறுதிவரை வெற்றிகரமாக நிறைவேற்ற திடத்தையும் துணிவையும் தூயஆவி அபரிமிதமாகக்கொடுக்கின்றார்.

### நற் செய்திகள்

எமது மீட்பராம் யேசுதாம் பாடுபடுவதற்கு முன்னும், உயிர்த்தபின் விண்ணேற்படைவதற்கு முன்பும் உங்களுக்கு ஒருதேற்றரவாளரை அனுப்புவேன் என்றுவாக்குக் கொடுத்து அதன்படி விண்ணகம் சென்ற பத்தாம் நாள் தூய ஆவியானவரை அனுப்பி வைக்கின்றார். யேசுவின் விண்ணேற்புக்குப்பின் அஞ்சி நடுங்கி அறைக்குள் ஒளிந்திருந்த சீடர்கள்மேல்புயற்காற்றின் மத்தியில் அக்கினிநாக்கு உருவமாக தூயஆவி இறங்குகின்றார். தூயஆவியைப்பெற்றுக் கொண்ட சீடர்கள்திடத்தோடும், துணிவோடும் வீறு கொண்டு எழுந்து நற்செய்தியை முழக்கமிட்டு அறிவிக்கின்றனர்.

### மன்றாடுவோம்

நாம் ஒவ்வொருவரும்இறைவனின் பரிசுத்த ஆவி, கடவுளின் வல்லமை என்பதை ஏற்றுக் கொள்வோம் இறைவனின் மாபெரும் சக்தி என்பதை விசுவாசிப்போம் குழப்பமான நேரத்தில் எது சரி, எது பிழை என்பதையும், போராட்டவேளையில் எதுநீதி எதுஅநீதிஎன்பதையும், தடுமாறும் வேளையில் எது தர்மம் எது அதர்மம் என்று சுட்டிக்காட்டும் பரிசுத்த ஆவியை நாமும் நிறைவாகப் பெற இறைமகன் கிறிஸ்துவின் ஊடாக வானகத் தந்தையிடம் மன்றாடுவோம். எமது உள்ளத்தைப் பரிசுத்த ஆவியின் ஆலயமாக்கி வார்த்தையின் ஊடாகவும், வாழ்வின் ஊடாகவும் சமூகத்தில் சாட்சியாக வாழ்ந்து நற்செய்தியை முழக்கமிட்டு அறிவிக்க முயற்சி எடுப்போம்.

ஆவியைத் தர வேண்டும்
இறைவா-எனை
ஆட்கொள்ள வரவேண்டும்
நிறைவாய்
உள்ளத்தில் வரவேண்டும்
தலைவா-இறை
ஞானத்தைத் தரவேண்டும்
நிறைவாய்.

---

### சோதிட பலன்

## கிரக சாந்தியும், கீர்த்தியும் பெற்று வாழ்ந்திட

# நவரத்தினங்களை நல்லமுறையில் அணியுங்கள்

**பாலாஜி**

ஒவ்வொரு கிரகத்திற்கும் ஒவ்வொருஇரத்தினம்உண்டு. நவக் கிரகங்களுக்குரிய இரத்தினங்களை ஆபரணங்களில் பொருத்தி அணிவதன் மூலம் அதிர்ஷ்டம் பெறலாம். கிரக சாந்தியும் உண்டாகும். அவை மழைக்குக் குடைபிடிப்பதைப் போன்றது, மழையை நிற்பாட்ட இயலாது. ஆனால் நனையாமற் போகலாம். கிரகங்களை பிரீதிசெய்யக் கூடிய இரத்தினக் கற்கள் எவையென்பதைப்பார்ப்போம்;

சூரியன் — மாணிக்கம்
சந்திரன் — முத்து
செவ்வாய் — பவளம்
புதன் — மரகதம்
வியாழன் — புஷ்பராகம்
வெள்ளி — வைரம்
சனி — நீலம்
இராகு — கோமேதகம்
கேது — வைடூரியம் என்பவையே அவை;

அதிர்ஷ்டக் கற்கள் என்று குறிக்கப்பட்டுள்ள வற்றை வாங்கும்போது, அதில் தேர்ச்சி பெற்றவரிடம் காட்டிக் குற்ற முடையதா? நல்ல ஜீவசக்தியுடன். இருக்கிறதா? என்பதைக் கண்டறிய வேண்டும்: அதன் பிறகு கல்லை வாங்கி நகைகள் செய்து, நல்ல நாள் பார்த்து அணிய வேண்டும். நாளும் கோளும் பார்த்துச் செய்யும் காரியங்கள் என்றைக்கும் தீமை பயக்காது. நன்மையை மேலும் நன்மையாகவே செய்யும்.

### மாணிக்கம்

மாணிக்கக் கல் மிருதுவானது. அதில் நான்கு வகைகள் இருக்கின்றன. பத்மராஜம், குருவிந்தம், சௌகாந்திகம், நீலகாந்தி என்பன. பத்மராஜம் தாமரை மலர் நிறத்தை ஒத்திருக்கும். ஒளி ஊடுருவிச் செல்லும் தன்மையது. உருண்டையாகவும், கண்களுக்குக் குளுமையாகவும் இருக்கும், குருவிந்தம் நல்ல சிவப்பாக இருக்கும். மிகநேர்த்தியாகக் காணப்படும். சௌகாந்திகம் மஞ்சள் கலந்த சிவப்பு நிறத்துடன் இருக்கும்; நீல காந்தியை நீல கங்கை என்றும் அழைப்பார்கள். அது தண்ணீரின் அடிமட்டத்திலேயே கிடைக்கிறது. மாணிக்கக் கல் அதன் உருவத்திற்கும் அதிக கனமாக இருக்கும், ஒளி ஊடுருவிச் செல்லும். இருட்டில் வைத்தால் ஒளிவிட்டுப் பிரகாசிக்கும். மாணிக்கக் கல்லை அணிந்து கொள்வதால் எல்லாவித நன்மையும் அடைவர். பதவி உயரும், வாழ்க்கையில் எல்லா இன்பங்களையும் பூரணமாக அனுபவிப்பர். மனவலிமை அற்றவர்களையும் மனோ வலிமை மிக்கவராகச் செய்யும்.

### முத்து

கடலின் அடியிலிருந்தே முத்து எடுக்கப்படுகிறது என்பதை அனைவரும் அறிவர். நல்ல முத்துக்கள் பால்நிறத்திலும், ஒளியுடனும் இருக்கும். இவற்றில் சற்றுமங்கிய நிறமுள்ள முத்துக்களும் இருக்கின்றன. முத்துக்களை மோதிரம், காதணி, கழுத்து மாலை, வளையல்கள் ஆகப் பலவகையிலும் நகைகள் செய்து அணியலாம் முத்து அணிந்து கொண்டால் அவருடைய முகத்தில் ஒருவசீகரம் ஏற்படும். பணத்தட்டுப்பாடு ஒருபோதும் ஏற்படாது. தூய்மையான உள்ளத்தையும், பணிவையும் உண்டு பண்ணும். தாம்பத்திய வாழ்க்கையில்இன்பத்தை அளிக்கும்;

### பவளம்

நல்ல பவளங்கள் சற்று வெண்மை கலந்த சிவப்பு நிறமாக இருக்கும். கனமாகவும், குண்டாகவும் சற்று நீண்டும் இருக்கும். நல்ல பவளங்களை எளிதில் உடைக்க முடியாது. ஒளி ஊடுருவிச் செல்ல முடியாது. நம் நாட்டில் பவள மாலை அணியஆசைப்படாத பெண்களே இருக்கமாட்டார்கள். நேபாளம் போன்ற மலை நாட்டில் பெரிய பெரிய பவளங்களில் மாலை போட்டுக் கொள்கிறார்கள். சிறு பவளங்களைக் கொண்டு காதணிகளும், பொன் வளையங்களில் பதித்தும் பலர் அணிகிறார்கள், பவளங்கள் கவர்ச்சியை அளித்து நோயை அகற்றும். மற்றவர் போற்றுவர். முன்கோபக் காரரையும் சாந்தசீலராக்கும்.

### கோமேதகம்

பழுப்பு கலந்த சிவந்த நிறத்துடனும், மஞ்சளுடனும் பொன்னிறமாகவும் கோமேதகம் இருக்கும், ஒளி ஊடுருவிச் செல்லக் கூடியதாகவும், கடினமானதாகவும், பிரகாசமான ஒளியுடன் கூடியதாகவும் கோமேதகம் இருக்கும். அணிபவருக்கு அதிர்ஷ்டத்தையும், மன மகிழ்ச்சியையும் அளிக்கும். நோய்களுக்குப்பாதுகாப்பாக அமையும்.

### புஷ்பராகம்

பலநிறங்களுடன் பிரகாசிக்கும் இதுவெள்ளையாக வேயிருக்கும். ஒளி ஊடுருவிச் செல்லக் கூடியதாகவும் சிறிது மஞ்சள் கலந்து மிருக்கும் கடினமாகவும், கனமாகவும் இருக்கும். பிரயாணம் செய்யும் காலங்களில் ஏற்படும் விபத்துக்களிலிருந்து காப்பாற்ற புஷ்பராகம் மிகவும் சிறந்தது. மேலும் இதை அணிந்து கொள்வதால் செல்வம் செழிக்கும். புகழும் மன அமைதியும் ஏற்படும் மண வாழ்க்கையில் இன்பத்தை அனுபவிப்பார்.

### நீலம்

நீலக்கல் கருநீலமாக இருக்கும் ஒளியுடன் கூடிய இது சுத்தமானதாகவும், குற்றமில்லாததாகவும் இருப்பது மிகவும் அவசியம். நல்ல நீரோட்டமுள்ள கல்லாக இருக்கவேண்டும். நீலநிறக் கல் மோதிரம் அல்லது ஆபரணத்தை அணிந்திருந்தால் வரவிருந்த பெரிய தீமையையும் தடுத்து நிறுத்தி, வராவார் நீல நிறக்கல்லை அணிந்தவர் தவறானவழியில் செல்ல இயலாது சமூகசட்ட திட்டங்களைத் தாமாகவே கடைப்பிடிப்பார். பெருந்தன்மையாகவும் பணிவுடனும் நடந்து கொள்வார்,

### மரகதம் (பச்சை

நல்ல மரகதம் பச்சைப் பசேல் என்ற நிறத்துடனிருக்கும். ஒளி ஊடுருவக்கூடியதாகவும், பிரகாசமாகவும் இருக்கும், கதிரவனின் ஒளி அல்லதுவிளக்கின் ஒளி அதன் மீதுதாக்கினால் அந்த இடம் பூராகவும் பச்சை நிறமாகக் காட்சி யளிக்கும். மரகதக் கல்லை அணிந்தால், கவர்ச்சியும் மன நிறைவும், ஏற்படும், வாழ்க்கையில் புகழும். உயர் பதவியும் கிடைக்கும் மண வாழ்க்கையில் மகிழ்ச்சி உண்டாகும்.

(2ம் பக்கம் பார்க்க)

# ★ மன்னர் பிரேந்திரா விஷ்ணுவின் அவதாரமென நேபாள மக்கள் நம்பிக்கை!

சுட்டுக்கொலை செய்யப்பட்ட நேபாளமன்னர்பிரேந்திரா 1972ம் ஆண்டு மன்னனாகமுடிசூட்டப்பட்டார் சுட்டுக்கொலை செய்யப்படும்போது இவருக்குவயது55 ஆகும்

நேபாளத்தின் பெரும் பான்மையான மக்கள் மன்னர் பிரேந்திராவை விஷ்ணுவின் அவதாரமாகக் கருதி அவர் மீது பெரும்மதிப்பு வைத்திருந்தனர். நேபாள மக்களின் மதிப்பிற்கும் நம்பிக்கைக்கும். அபிமானத்திற்கும் உரியமன்னர் பிரேந்திரா நேபாளத்தின்மன்னனாக முடிசூடிய பின் அங்குள்ள அரசியல்கட்சிகளின் ஆதரவுடன்ஆட்சியை முன்னெடுத்து வந்தார்.

ஜனநாயக முறையில் அரசியல் கட்சிகள் தோற்றம் பெற்று பாராளுமன்றஅரசியல் நேபாளத்தில் புகுத்தப்பட்டபின்னர் மன்னர்பிரேந்திரா அமைதியான முறையில் ஆட்சிஅமைத்திருந்தார்.

(உ-7)

## மன்னரின் ---

மன்னர் பிரேந்திரா இலங்கையுடன் உற்றநண்பனாகவும் இருந்தார்.

அவரது இழப்பினால் சோகத்தில் ஆழ்ந்திருக்கும் 2 கோடியே 20லட்சம் நேபாளமக்களின் துயரத்தில் நாமும் இலங்கை மக்களும் பங்குகொள்கிறோம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ

## புலிகளுக்குச் ---

லியில் தங்கியிருக்கும் இலங்கையின் மீன்பிடி நீரியல்வள அமைச்சர் மகிந்த ராஜபக்ஷ செய்தியாளர்களுக்கு வழங்கிய பேட்டியில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், விடுதலைப் புலிகளுக்கு சர்வதேச ரீதியாக அங்கீகாரம் கிடைப்பதற்கான முயற்சிகளிலேயே நோர்வே ஈடுபடுகிறது.

யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வருவதற்கு சகல அரசியல் கட்சிகளும் ஒன்றிணைந்து தீர்வுப்பொதியொன்றைத் தயாரித்து அதனை விடுதலைப் புலிகளிடம் சமர்ப்பிக்க வேண்டும்.

அத்தீர்வுப் பொதியை ஏற்றுக் கொள்வதும் நிராகரிப்பதும் புலிகளின் விருப்பத்தை பொறுத்தது.

ஆனால் எந்தவொரு அரசியல் தீர்வையும் விடுதலைப் புலிகளின் தலைவர் ஏற்றுக் கொள்வாரென்று எனக்குத் தோன்றவில்லையென்றும் அமைச்சர் ராஜபக்ஷ மேலும் தெரிவித்துள்ளார். [இ]

## இராணுவத்தின் ---

யேற்பட்டிருந்தமையும் அரசியற்கட்சித்தொடர்பு இருந்ததான குற்றச்சாட்டுமே இவர் ஒய்வுபெற்றமைக்கு காரணமாயிருந்தன.

அக்கினிச்சுவாலை நடவடிக்கையில் பின்னடைவு ஏற்பட்டமையைத் தொடர்ந்து இவரை மீண்டும் சேவையில் இணைக்கும் விருப்பம் அரசாங்கக்கட்சியினர் மத்தியில் ஏற்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. ஓய்வுபெற்ற பின்னர் ஜானக பெரேராவை இலங்கையரசு அவுஸ்திரேலியாவுக்கான தூதுவராக நியமித்தது- ஆயினும், இவர் இப்பதவிக்கு நியமிக்கப்பட்டதை சர்வதேச ஈழக்குழுக்கள் ஆட்சேபித்தன இதனால் ஏற்பட்ட தடங்கல்களை இலங்கை வெளியுறவு அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர் தலையிட்டு அகற்றிய பின் தூதுவர்நியமனம் உறுதியாகிவிட்டது.

ஆனால் அவரை ராஜதந்திரப்பதவியிலிருந்து நிறுத்திவைத்து இராணுவத்தின் பிரதம தளபதியாக நியமனம் செய்யவேண்டுமென்று அரசின் முக்கிய தலைவர்கள் தீவிரமாக ஆலோசிப்பதாக தெரியவந்துள்ளது. சமாதானமுயற்சிகள் தோல்வியை எட்டிநிற்கும் சூழலில் இது முக்கியமானதாகும் எனக் கருதப்படுகிறது. (ந)

# கொலை; காணாமல்போதல்

# இலங்கையில் பெருமளவு அதிகரிப்பு!

(லண்டன்)

இலங்கையில் வன்முறைகள் அதிகரித்து வருவதுடன் போரும் தீவிரமடைந்துள்ளது. இராணுவ நடவடிக்கைகளும் தீவிரமடைந்து அப்பாவிப் பொதுமக்கள் பல விதமான கஸ்ரங்களுக்கு உள்ளாகின்றனர்.

இவ்வாறு சர்வதேச மனித உரிமைகள் அமைப்பான 'அன்நெஸ்ரிக் இன்ரநசினல்' தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

லண்டனைத் தலைமையகமாகக் கொண்டு செயற்படும் மேற்படி அமைப்பு, இலங்கையின் மனித உரிமைகள், பாதுகாப்பு, தொடர்பாக அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.

அவ்வறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது

அப்பாவிப் பொதுமக்கள் கொலை செய்யப்படுதல், காணாமல் போதல் மற்றும் சிறைக்கூடங்களில் சித்திரவதைக்குள்ளாக்கப்படுதல் ஆகியன இலங்கையில் அதிகரித்துள்ளது என அவ்வறிக்கையில் சுட்டிக்காட்டப் பட்டுள்ளது,

அத்துடன் படுகொலைகளில் ஈடுபடுவோர் தப்பித்துக் கொள்வது இலங்கையில் சாதாரணமாக நடைபெறுவதுடன் அவற்றில் அரசியல் தலையீடுகளும் இருப்பதாக அவ்வறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை பிந்துனுவெவ படுகொலைச் சம்பவம் மற்றும் களுத்துறைச் சம்பவம் ஆகியவையும் பெரும் மனித உரிமை மீறல்களாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (இ)

## தேசிய அரசு ...

அரசு மீது ஐக்கிய தேசியக் கட்சி கொண்டுவருவதற்கு உத்தேசித்துள்ள நம்பிக்கையில்லாத் தீர்மானம் வெற்றியடையப்போவதில்லை,

இலங்கையின் இனப்பிரச்சினைத்தீர்விலும், விடுதலைப் புலிகளின் விடயத்திலும் ஸ்திரமான கொள்கையை அரசு பின்பற்றிவருகிறது.

புலிகளை எப்படியாவது பேச்சுவார்த்தை மேசைக்கு கொண்டுவந்து பிரச்சினைக்கு முடிவுகாண்பதிலேயே அரசு தீவிரகவனம் செலுத்தி வருகிறது இவ்விடயத்தில் தீர்க்கமான முடிவு ஒன்றை அரசு விரைவில் எடுக்கவுள்ளதாகவும் குறித்த அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (ம)

## பயங்கரவாத ...

னால் அவற்றைக் குறைப்பதற்கு ஏற்ற வகையில் பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்கவேண்டுமென்று, சர்வதேச சமூகம் இலங்கை அரசிற்கு அழுத்தம் கொடுத்து வருகிறது.

இந்நிலையிலேயே பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்குவது சம்மந்தமாகஅமைச்சர் கதிர்காமர் தலைமையிலான உயர்மட்டக்குழு,

பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்குவதனால் ஏற்படும் சாதக பாதக நிலைமைகள் பற்றியும் வெளிநாடுகளுக்கு செல்லும் இலங்கையர்களின் எண்ணிக்கையைக் குறைப்பது தொடர்பாகவும் ஆராய்ந்துள்ளது.

இதேவேளை அடுத்தவாரமும் மேற்படி குழு கூடிஇறுதி அறிக்கை ஒன்றை தயாரித்து சந்திரிகாவின் பரிசீலணைக்காக அனுப்பி வைக்கப்படும். (இ)

## சமாதானப் ---

தற்காகதேசியரீதியாகவும் சர்வதேசரீதியாகவும் நாம்முயற்சிகளைமேற்கொண்டுவருகின்றோம். அதற்காக சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்க தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனுக்கு விரைவில் அழைப்பு விடுக்கப்படும்.

அரசாங்கத்துடன் நிபந்தனைகள் எதுவுமின்றி பேச்சுக்களில் ஈடுபடுவதாகதெரிவித்த விடுதலைப்புலிகள் தற்போது நிபந்தனைகள் விதித்துள்ளனர்.

ஆனால் தமிழ்மக்களின் உரிமைகளை உண்மையாகவே விடுதலைப்புலிகள் காபடவர்களாக இருந்தால் நிபந்தனைகளைக் கைவிடடு அரசாங்கத்துடன் பேச்சுக்களில் ஈடுபட முன்வரவேண்டுமென்றுஜனாதிபதி கோரிக்கை விடுததுள்ளார்.

இதேவேளை சமாதானமுயற்சிகள் முக்கிய கட்டத்தை கடந்துள்ள நிலையிலும் அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும்இடையிலான சமாதானப் பேச்சுவார்த்தை நடைபெறுவதற்கான சாத்தியம் தென்படவில்லை யென்று ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (இ)


*WANTED*

01. Full Time Medical Officer - MBBS / RMO
02. Midwife / Nurse
03. Dispenser with Experience

Apply with Bio - Data and Copies of Certificates

**Central Nursing Home (Pvt) Ltd.**
350, Palaly Road, Thirunelvely
(C/ 3188)



**இலங்கை நிர்வாக சேவை**
**.(S. L. A. S)**
**மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை**

**2001**

மேற்படி போட்டிப்பரீட்சைக்கான பயிற்சி வகுப்புக்கள 09-06-2001 காலை 9 மணிக்கு யாழ்-மத்திய கல்லூரி மண்டபத்தில் ஆரம்பமாகவுள்ளது.

கலந்துகொள்ள விரும்புவோர் ஸ்ரான்லிவீதிமணியம் கட்டடத்திலுள்ள ரான் பணிமனையில் தமது பெயர்களை 07-06-2001க்குமுன் பதிவுசெய்துகொள்வதுடன் அதற்கானசேவைக்கட்டணத்தையும் செலுத்திஅனுமதி அட்டைகளைப் பெற்றுக்கொள்ளுமாறு தயவாக வேண்கின்றோம்.

இணைப்பாளர்
(கி-2059) பயிற்சிப்பட்டறை



**கண்ணீர் அஞ்சலி**

**செல்வநாயகம் சற்குணானந்தன்**
**(வீனஸ் டில்கா உரிமையாளர்)**

வீனஸ் டில்கா உரிமையாளராகிய செல்வநாயகம் சற்குணாநந்தன் (சற்குணம்) அவர்களின் திடீர் மறைவினால் துயரம் அடைந்திருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

**Jaffna Technical Institute**
266/1 Stanley Road Jaffna.
கி-2058 - நிர்வாகம்



**மரண அறிவித்தல்**

**செல்வநாயகம் சற்குணானந்தன்**

வீனஸ் டில்கா உரிமையாளர் செல்வ நாயகம் சற்குணானந்தன் (சற்குணம்) அவர்களின் ஈமைக் கிரியைகள் அன்னாரது இல்லத்தில்நடைபெற்றுபூதவுடல் இன்று பி.ப 2 00 மணிக்கு கோம்பயன் மணல் மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

தகவல்
(1385) N. தியாகராஜா



**நாகம்ஸ்**
(சுன்னாகம்)
சத்தியராஜ், குஷ்பு
கபாலி
நடித்த
**உன்னைக் கண் தேடுதே**
தினசரி [ரீல்ஸ்]
11-00, 2-30 பு. நே.
(கி-2051)



சுகாதார முறைப்படி உணவிற்கும் வைத்தியர்களுக்கும் விஷேசமாகத் தயாரிக்கப்பட்டது.

சுத்தமான

**வி.எஸ்.பி. நல்லெண்ணெய்**

தயாரிப்பாளரும், ஏகவிநியோகஸ்தரும்

**பரிமளா ஸ்ரோர்ஸ்**

26A, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
(கி-1986)


## பிற்போடப்பட்டது

இன்று [03-06-2001] நடைபெறவிருந்த வலம்புரியின் செய்தியாளர்களுக்கான கூட்டம் தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளது. திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

ஆசிரியர்.

இப்பத்திரிகை "வலம்புரி" அன்கோ ஸ்தாபனத்தாரால் இல. 15, ஸௌள்ளாந்தெரு. யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2001ம் ஆண்டு யூன் மாதம் 03 -ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.